OPTICIANS
SIGHT TESTED
PRESCRIPTIONS
ACCURATELY
DISPENSED
S. M. FERNANDO
580, HOSPITAL ROAD,
(Near Bank of Ceylon)
JAFFNA.

பக்கங்கள் ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

கண் வைத்திய நிபுணர்கள் சிபார்சு செய்யும் கண்ணாடிகளை சரியாக வழங்குபவர்கள்
எஸ். எம். பெர்னாண்டோ
580, ஆஸ்பத்திரி வீதி,
(இலங்கை வங்கிக்கு அருகில்)
யாழ்ப்பாணம்.

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2024 கார்த்திகை 13 ஞாயிற்றுக்கிழமை (28 – 11 – 1993) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 02

# சிலாவத்துறை, கொண்டைச்சியிலிருந்து படையினர் கூண்டோடு வெளியேறினர்!

## ஜி. சீ. ஈ பரீட்சை வினாத்தாள்

யாழ்ப்பாணம், நவ. 28
எதிர்வரும் 6 ஆம் திகதி ஆரம்பமாகும் ஜி.சீ.ஈ. (சாதாரண தர) பரீட்சை வினாத்தாள்களை கொழும்பில் இருந்து விமான மூலம் எடுத்து வர யாழ். கல்வி அலுவலக அதிகாரி ஒருவர் நாளை கொழும்பு செல்கிறார்.
(இ-3)

## ஐ.தே.க – இ.தொ.கா உறவு நீடிக்குமா?

### இன்று தீர்மானம்

கொழும்பு, நவ. 28
ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தில் தொடர்ந்து அங்கம் வகிப்பதா? இல்லையா? என்பது குறித்தும், எடுக்கப்படவேண்டிய எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பாகவும் இன்று நடைபெறவுள்ள தேசிய மாநாட்டில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் முடிவு எடுக்கவுள்ளது.

மலையகத்தில் உள்ள பெருந்தோட்டங்களின் நிர்வாகங்கள் குறித்து இ.தொ.காவின் கோரிக்கைகள் ஏற்கனவே அரசாங்கத்திடம் சமர்பிக்கப்பட்டுள்ளன.

இன்று நடைபெறவுள்ள இ.தொ.கா. தேசிய மாநாட்டில் ஐ.தே.க. அரசில் இருந்து விலகிக்கொள்வது என முடிவு எடுக்கப்பட்டால் மத்திய மாகாண சபையின் ஆட்சி அதிகாரம் எதிரணிக்கு மாறும் நிலை ஏற்படும் எனச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

மத்திய மாகாண சபையில் தற்சமயம் உள்ள 32 ஐ.தே.க. உறுப்பினர்களில் 11 பேர் இ. தொ. காவைச் சேர்ந்தவர்களாவர். இந்தப் 11 பேரும் எதிரணியுடன் இணைவார்களாயின் எதிரணி உறுப்பினர்களின் எண்ணிக்கை 37 ஆக உயர்ந்துவிடும் என்றும் — அத்தகைய நிலை ஏற்படின் மத்தியமாகாண சபையின் முதலமைச்சராகத் தெரிவாகும் வாய்ப்பு திரு. காமினி

(6ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் பூநகரித் தாக்குதல் ஏற்படுத்திய விளைவு இது!!

யாழ்ப்பாணம், நவம்பர் 28
மன்னார் மாவட்டத்தில் இராணுவத்தின் கேந்திர நிலையங்களாக விளங்கிய சிலாவத்துறை, கொண்டைச்சி முகாம்களைக் கைவிட்டு படையினர் கூண்டோடு வெளியேறி விட்டனர்.

விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தலாம் என்ற அச்சத்தினாலேயே படையினர் அவ்விரு முகாம்களில் இருந்தும் வெளியேறியதாக அறியப்படுகிறது.

சிலாவத்துறை இராணுவ முகாம், மன்னார் மாவட்டத்தில் தள்ளாடி முகாமுக்கு அடுத்த பெரிய முகாமாகும். கொண்டைச்சி முகாமை மையமாக வைத்தே மரமுந்திரிகைச் செய்கை என்ற பெயரில் சிங்களக் குடியேற்றம் பெரிய அளவில் நடத்தப்பட்டது.

இந்த இரண்டு முகாம்களில் இருந்தும் படையினர் நேற்று முன்தினம் பிற்பகல் 4 மணியுடன் முற்றாக வெளியேறினர்.

இந்த இரண்டு முகாம்களில் இருந்தும் படையினர் விலகிவிட்டதால் மூன்று மைல் பிரதேசம் இராணுவ ஆக்கிரமிப்பில் இருந்து விடுபட்டுள்ளது.

கடந்த இரண்டு மாதங்க

(6ஆம் பக்கம் பார்க்க)

## இரு மாநிலங்களில் பா.ஜனதா முன்னணி

### இமாசல பிரதேசத்தில் காங்கிரஸ்

புதுடில்லி, நவ. 28
இந்தியாவின் உத்தரப் பிரதேசம், இமாசலப் பிரதேசம் டில்லி, ராஜஸ்தான் ஆகியவற்றில் நடைபெற்ற சட்டசபைத் தேர்தல்களின் பல முடிவுகள் நேற்று நள்ளிரவு வெளியாகின.

உத்திரப் பிரதேசத்தில் பகுஜன சமாஜக் கட்சி 9 தொகுதியிலும் சமாஜவாதிக் கட்சி 10தொகுதியிலும் பாரதீய ஜனதாக் கட்சி 7 தொகுதியிலும் இந்திரா காங்கிரஸ் கட்சி 2 தொகுதியிலும் முன்னணியில் இருக்கின்றன.

இமாசலப் பிரதேசத் தின் 22 தொகுதிகளில் இந்திரா காங்கிரஸ் 15 தொகுதிகளிலும் பாரதீய ஜனதாக் கட்சி 3 தொகுதிகளிலும் சுயேச்சைகள் 3 தொகுதிகளிலும் முன்னணியில் இருக்கின்றன. இன்னும் 10 தொகுதிகளில் இந்திரா காங்கிரஸ் 8 இல் முன்னணியில் இருக்கிறது.

டில்லியின் 21 தொகுதிகளில் 15 இல் பாரதீய ஜனதாக் கட்சியும் 6 இல் இந்திரா காங்கிரஸ் கட்சியும் முன்னணியில் இருக்கின்றன.

(6 ஆம் பக்கம் பார்க்க)

### மூச்சந்தி மாலி



திருமலை இராணுவக் கட்டுப்பாட்டில் என்கின்றனர் ... பிறகு வெடிச்சத்தத்துக்கு ஒடுகினம்......!

## வடபிராந்தியத் தளபதியாக ஜெரி டி சில்வா நியமனம்

### பூநகரித் தோல்வியை அடுத்து மாற்றம்

கொழும்பு, நவ. 28
அண்மையில் பூநகரியில் இராணுவம் சந்தித்த பாரிய தோல்வியை தொடர்ந்து பாதுகாப்பு நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்காக வட பிராந்திய தளபதியாக மேஜர் ஜெனரல் ஜெரி டி சில்வா நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுவரை காலமும் வட பிராந்திய தளபதியாக கடமையாற்றிய மேஜர் ஜெனரல் ரோகான் தலுவத்தயின் இடத்துக்கே இவர் நியமனம் பெற்றுள்ளார்.

படைத்துறை பிரதம அதிகாரியாகவிருந்த இவர் முன்னர் யாழ். மாவட்ட தளபதியாக பணியாற்றியுள்ளார்.
(இ-3-5-6)

## மாவீரர் நாளையொட்டி

## பிரபாவின் பணிப்பின் பேரில் 42 கைதிகள் நேற்று விடுதலை

யாழ்ப்பாணம், நவ. 28
தமிழீழ காவல் துறையால் பல்வேறு குற்றங்களுக்காக கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருந்த 42 நபர்கள் தமிழீழ மாவீரர் நாளை யொட்டி நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

தமிழீழ தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரனின் விசேட பணிப்பின் பேரில் இவர்கள் விடுதலை செய்யப்பட்டனர் என்று தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் திரு. பா. நடேசனால் தெரிவிக்கப்பட்டது.

இந்த ஆண்டுக்கான தமிழீழ மாவீரர் நாளையொட்டி விடுதலையான இவர்கள் அனைவரும் செய்த குற்றங்கள் காவல்துறையினால் விசாரணை செய்யப்பட்டன என்றும் —

இவர்கள் குற்றவாளிகளாகக் காணப்பட்டு காவல்துறையின் சீர்திருத்தப் பிரிவில் தடுத்துவைக்கப்பட்டிருந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இப்படி தடுத்து வைக்கப்பட்டிருந்த 42 பேருமே நேற்று விடுவிக்கப்பட்டிருந்தனர்.
(இ)

## கோமாரி நாளை புறப்படும்?

தற்சமயம் பருத்தித்துறையில் பொருள்கள் இறக்கிக் கொண்டிருக்கும் 'கோமாரி' கப்பல் நாளை திங்கட்கிழமை கொழும்பு நோக்கி செல்லும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இக்கப்பலில் இருந்த பொருள்களை இறக்கும் வேலை மந்தகதியில் நடைபெறுவதாகவும் —

பெரும்பாலும் நாளை பொருள்கள் இறக்கி முடிக்கப்படலாம் என்றும் — தெரிவிக்கப்பட்டது.

கொழும்பு திரும்பியதும் இக்கப்பல் திருத்த வேலைகளுக்குச் செல்லும் என்றும்—

இக் கப்பலுக்குப் பதிலாக வேறொரு கப்பலை சேவையில் ஈடுபடுத்த புனர்வாழ்வு. புனரமைப்பு அமைச்சு முயற்சி மேற்கொண்டுள்ளதாகவும் — தெரிவிக்கப்பட்டது.

## கடல்வழி ஊடாக படையினர் நுழைவதை தடுக்கும் நிலையிலே புலிகள்!

### மாவீரர் நாள் கூட்டத்தில் கரிகாலன்

யாழ்ப்பாணம், நவ. 28
ஆனையிறவு முகாம் தாக்குதலின் போது, சிங்கள அரசு படையினரை கடல் வழியாக கப்பல் மூலம் இறக்கியது. ஆனையிறவு யுத்தம் நடைபெற்று ஒரு வருடத்தின் பின் இன்று கடல் வழி ஊடாக இராணுவம் நுழைய முடியாத நிலையை தலைவர் பிரபாகரன் உருவாக்கி உள்ளார். பூநகரி — நாகதேவன் துறை கடற்படை முகாமை தகர்த்து படகுகளைக் கைப்பற்றும் அளவுக்கு கடற்புலிகள் வளர்ச்சி அடைந்துள்ளனர்.

மாவீரர் நாளையொட்டி நேற்று மாலை ஒழுங்கு செய்யப்பட்ட பொதுக் கூட்டத்தில் பேசுகையில் தமிழீழ அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் திரு. கரிகாலன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வலிகாமம் கோட்டத்துக்கான இந்தப் பொதுக் கூட்டம் அரியாலை சாசிப்பிள்ளை மைதானத்தில் நடந்தது.

யாழ். மாவட்ட விசேட தளபதி திரு. செல்வராஜா தேசியக் கொடியை ஏற்ற, வலிகாமம் தளபதிதிரு. இளங்குமரன் ஈகைச் சுடரை ஏற்றினார்.

வலிகாமம் அரசியல் பொறுப்பாளர் திரு. திருக்குமார் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் திரு. கரிகாலன் மேலும் பேசுகையில் கூறியதாவது.

எமது விடுதலைப் போராட்டத்தின் வெற்றிக்கு அடித்தளமாக விளங்கும் மாவீரர்களின் தியாகங்களை — அவர்கள் என்ன இலட்சியத்துக்காக மரணித்தார்கள் என்பதை—மக்கள் உணர வேண்டிய கடப்பாடு உண்டு.

உலக நாடுகள் எல்லாம் எமது போராட்டத்தின் வளர்ச்சியை, தாக்குதல் திறனை உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருப்பதற்கு காரணம் மாவீரர்களின் தியாகங்களே.

தமிழர் பிரச்சினை பயங்கர

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மாவீரர் நாள் தமிழீழம் எங்கும் எழுச்சிதினமாக நடைபெற்றது

யாழ்ப்பாணம், நவ. 28
தமிழீழ மக்களின் சுதந்திரத்திற்காகவும், பாதுகாப்புக்காகவும், விடுதலைக்காகவும் போராடி தமது இன்னுயிரை ஈந்த ஒப்பற்ற தற்கொடையாளர்களான மாவீரர்களை நினைவு கூரும் மாவீரர் நாள் நேற்று தமிழீழத்தில் தேசிய எழுச்சி தினமாக கொண்டாடப்பட்டது.

நேற்றுக் காலை 9 மணிக்கு தேசியக் கொடி வணக்கமும், மாவீரர் அஞ்சலியும் இடம்பெற்றன.

காலையிலிருந்தே மக்கள் மாவீரர்களை நினைவு கூர்ந்தனர். பொதுப் பந்தல்களிலும், மாவீரர் துயிலுமில்லங்களிலும் மக்கள் குழுமி நின்று மாவீரர்களுக்கு தமது அஞ்சலியைச் செலுத்தினர்.

அரச, தனியார் நிறுவனங்கள், வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டிருந்தன.

கொட்டும் மழையின் மத்தியில் வானத்தில் உறுமிக் கொண்டு வட்டமிட்டுத் திரிந்த விமானங்களின் இரைச்சலின் மத்தியிலும் மக்கள் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தியதைக் காணமுடிந்தது.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள பல இந்து ஆலயங்களிலும், மாவீரர் நாளையொட்டி விசேட பூசைகள் நடைபெற்றன.

யாழ்ப்பாணம், முல்லை, வன்னி, மன்னார் மாவட்டங்கள் அடங்கிய வடதமிழீழத்தில் மாவீரர்தின நிகழ்ச்சிகள்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பொன்னாலையில் ஷெல் வீச்சு

யாழ்ப்பாணம், நவ. 28
காரைநகர் இராணுவ முகாமில் இருந்து நேற்று அதிகாலை 3 மணிக்கு பொன்னாலை மூளாய்ப் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

பொன்னாலை குடியேற்றப் பகுதி, ஆட்டுப்பட்டி, மூளாய் கரையோர வயல்வெளி ஆகியவற்றில் ஷெல்கள் விழுந்து வெடித்தன.
[இ-3-15]

## சீவல் தொழிலாளி படையினரால் கைது

யாழ்ப்பாணம், நவ. 28
சீவல் தொழிலுக்குச் சென்ற ஒருவர் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த வியாழக்கிழமை அளவெட்டியில் இச்சம்பவம் நிகழ்ந்தது.

மல்லாகம் தும்புத்தொழிற்சாலை இடம்பெயர்ந்தோர் முகாமில் வசிக்கும் சுப்பையா செல்லத்துரை (39 வயது) என்பவரே கைது செய்யப்பட்டவர் ஆவார்.
(இ-3)

## தவறுதலாக வெடித்த துப்பாக்கியால் பதற்றம்!

### புலிகள் வந்ததாகப் பொலீஸ் அச்சம்!!

திருகோணமலை, நவ. 28
காவலுக்கு நின்ற பொலீஸ்காரரின் துப்பாக்கி தவறுதலாக வெடித்ததைத் தொடர்ந்து சாம்பல்தீவு மற்றும் சல்லி கிராமங்களில் பெரும் பதற்றம் நிலவியது!

பொலீஸ்காரர் ஒருவரின் துப்பாக்கி தவறுதலாக வெடித்ததும், விடுதலைப் புலிகள் போராளிகளே சுட்டார்கள் என்று கருதி ஏனைய பொலீஸ்காரர்கள் கண்டபடி சரமாரியாகச் சுட்டனர்.

இந்த வேட்டுக்களைக் கேட்டு சாம்பல்தீவு பொலீஸ் காவல் அரணிலிருந்து சம்பவம் நடந்த சல்லிக் கிராமத்துக்கு மேலதிக பொலீஸார் விரைந்தனர்.

சம்பவம் நடந்த இடத்துக்கு விரைந்த மேலதிக பொலீஸாரும் கண்மூடித்தனமாக பல நிமிடநேரம் சுட்டனர்.

இதனால் சல்லி, சாம்பல்தீவு மக்கள் பெரும் பதற்றம் அடைந்தனர். போக்குவரத்தும் சிறிதுநேரம் தடைப்பட்டது.

பல வாரங்களுக்கு முன்னர் சாம்பல்தீவு பொலீஸ் காவல் அரணை விடுதலைப் புலிகள் தாக்கியதில் ஐந்து பொலீஸ்காரர்கள் மாண்டனர். அதன் பின்னர் மீண்டும் புலிகள் தாக்கலாம் என்ற அச்சத்துடன் பொலீஸார் இருந்தனர்.

தங்களில் ஒருவரின் துப்பாக்கி தவறுதலாக வெடித்த போது, விடுதலைப் புலிகள் தாக்குதல் மேற்கொள்கிறார்கள் என நினைத்தே கண்டபடி வேட்டுக்களைத் தீர்த்தனர். மேலதிக பொலீஸாரும் விரைந்தனர்.

தாம் சுட்டதை நியாயப்படுத்துவதற்காக, விடுதலைப் புலிகளே துப்பாக்கி வேட்டுகளைத் தீர்த்ததாகப் பொலீஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.
(அ-ரி)

## பூநகரித் தாக்குதலுக்குப் பழிவாங்க

## யாழ்ப்பாணத்தை இலக்காக வைத்து பெரும் ராணுவ நடவடிக்கை?

''பூநகரித் தாக்குதல் சம்பவத்தின் பின்னர் யாழ்ப்பாணத்தை இலக்காகக் கொண்ட இராணுவ நடவடிக்கை ஒன்றை நடத்துவதற்கு இராணுவம் எண்ணியுள்ளதாகத் தெரிகிறது. பூநகரியில் ஏற்பட்ட தோல்விக்கு பழிவாங்கும் நோக்கில் மேற்கொள்ளப்படவுள்ள இந் நடவடிக்கை பாரிய அழிவையே தேடித் தரும்.''

''ராவய'' சிங்களப் பத்திரிகையின் ஆசிரியர் திரு. விக்டர் ஐவன் பி. பி. ஸி சிங்கள சேவையில் இவ்வாறு கூறியுள்ளார்.

யாழ். நோக்கிச் செல்லும் எந்த இராணுவ நடவடிக்கையும் இரு தரப்பினருக்கும் அளவற்ற உயிரிழப்பை ஏற்படுத்துவது தவிர்க்க முடியாதது. இந்நிலை ஏற்பட்டால் யாழ். மக்களில் ஒரு தொகையினர் இந்தியாவுக்கு மீண்டும் அகதிகளாகத் தப்பி ஓடும் நிலை ஏற்படும். இதன் மூலம் இனப் பிரச்சினையில் மீண்டும் இந்தியா தொடர்பை ஏற்படுத்திக்கொள்ள வாய்ப்புண்டு — இவ்வாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தி. மு. கழகத்தை பிளவுபடுத்திய கோபாலசாமியின் வெளியேற்றம்!

தி. மு. க வில் ஏற்பட்டுள்ள உட்கட்சிப் போராட்டம் — அதன் காரணமாக கட்சியில் ஏற்பட்டுள்ள பிளவு ஆகியவற்றால் தமிழக அரசியல் மீண்டும் சூடுபிடிக்க ஆரம்பித்துள்ளது.

தி.மு.க. தலைவர் கருணாநிதியின் அரசியல் வாரிசு என்றும் ''போர் வாள்'' என்றும் ஒரு சமயம் கருதப்பட்ட தி.மு.க. ராஜ்யசபை உறுப்பினர் வை. கோபாலசாமியும் அவரது ஆதரவாளர்களும் கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர்.

இதுவே தி.மு.க.வில் பிளவுக்கு வழிவகுத்தது.

கட்சி விரோத நடவடிக்கையில் ஈடுபட்டதாக இவர்கள் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இந்த குற்றச்சாட்டின் பேரில் கோபாலசாமி முதலில் வெளியேற்றப்பட்டார். 9 மாவட்டச் செயலாளர்கள் தற்போது வெளியேற்றப்பட்டுள்ளனர்.

### சகல பிரிவுகளிலும் பிளவு

இவர்களது வெளியேற்றம் காரணமாக, கோபாலசாமி ஆதரவு அணி, கருணாநிதி ஆதரவு அணி என்று கட்சி இரு கூறுகளாகிவிட்டது.

சட்ட மன்றம் முதல் கட்சியின் சகல பிரிவுகளிலும் தற்போது பிளவு தெரிகிறது.

இளைஞர் அணி, தொழிலாளர் பிரிவு, மாணவர் அமைப்பு என அனைத்துப் பிரிவுகளும் பிளவுண்டு போய் உள்ளன. தி. மு. கவிடம் இருந்த இரண்டே இரண்டு சட்டசபை உறுப்பினர்களும் எதிரும் புதிருமாக நிற்கின்றனர்.

அவர்களில் ஒருவர் பரிதி இளம்வழுதி மற்றவர் செல்வராஜ்.

துறைமுக சட்டசபைத் தொகுதி உறுப்பினராக சமீபத்தில் தெரிவான செல்வராஜ், இந்தப் போராட்டத்தில் கோபாலசாமியை ஆதரித்து நிற்கிறார்.

ஆகவே 1972 ஆம் ஆண்டு கட்சியில் இருந்து எம். ஜி. ஆர். வெளியேற்றப்பட்ட போது உருவான நெருக்கடியை விட பல மடங்கு பெரிய நெருக்கடியை கோபாலசாமி வெளியேற்றம் கட்சிக்குள் ஏற்படுத்தி இருக்கிறது என்பதில் சந்தேகம் இல்லை.

சமீபத்தில் கருணாநிதியின் ராஜினாமா நாடகமும் இந்த உட்கட்சிப் போராட்டத்தின் ஓர் அங்கமே.

கருணாநிதி, கட்சியை குடும்பச் சொத்தாக்க முயற்சிக்கிறார் என்பதே கோபாலசாமியினதும் அவரது ஆதரவாளர்களினதும் பிரதான குற்றச்சாட்டு ஆகும்.

கடந்த செவ்வாய்க்கிழமை கருணாநிதியால் கூட்டப்பட்ட கட்சியின் செயற்குழுக் கூட்டத்துக்கும் கோபாலசாமி ஆதரவாளர்களான 40 செயற்குழு உறுப்பினர்கள் சமுகம் அளிக்கத் தவறி இருந்தனர்.

### தலைமையை கைப்பற்றும் போர்

இந்த பிளவை அடுத்து தி.மு.கவின் தலைமையைக் கைப்பற்றும் போர் ஆரம்பித்திருக்கிறது.

தாமே கட்சியின் தலைவர் என்று கோபாலசாமி தற்போது அறிவித்துள்ளார்.

தி.மு கவின் கொடி, சின்னம், சொத்து, கட்சித் தொண்டர் பணத்தால் கட்டப்பட்ட அண்ணா அறிவாலயம் அனைத்துக்குமே அவர் உரிமை கோரி இருக்கிறார்.



கருணாநிதி

எம். ஜி. ஆர். போன்று பிரிந்து சென்று தனிக்கட்சி அமைக்கும் நிலையில் கோபாலசாமி இல்லை என்றே தெரிகிறது.

தி.மு.கவின் சரித்திரத்தில் வழமையாக பிரிந்தவர்களே பலம் பெற்றுள்ளனர்.

ஆனால் இம்முறை இப்பிளவை கட்சி தாங்குமா? என்பதே முக்கிய கேள்வி ஆகும்.

தனது அதிகாரங்களைப் பிரயோகித்து, தனது தலைமையை தக்க வைப்பதில் கருணாநிதி வெற்றி பெறக் கூடும். ஆனால் 10 ஆண்டுகள் அதிகாரத்தில் இருந்த கட்சி மீண்டும் தனித்து ஆட்சி அமைக்க முடியுமா என்பது கேள்விக் குறியாகவே இருக்கும்.

### தமிழீழ ஆதரவாளர்

தி.மு.கவில் கனல் கக்கும் பேச்சாளரும், கழகத் தொண்டர்கள் மத்தியில் பெரும் ஆதரவு பெற்றவருமான கோபாலசாமி தமிழீழ ஆதரவாளர்.

முன்னர் தி.மு.கவில் தமிழீழ ஆதரவுக் கொள்கையை வகுத்தவரும் அவர் தான்.

கருணாநிதிக்கும் கோபாலசாமிக்கும் இடையிலான முறுகல் நிலை இன்று நேற்று ஏற்பட்டது அல்ல, கடந்த பல ஆண்டுகளாக அது இருந்து வருகிறது.

### யாழ்ப்பாண விஜயம்

இந்திய அமைதிப்படை யாழ்ப்பாணத்தில் இருந்த

## 'போர்வாள்' தற்போது கருணாநிதிக்கு எதிராக

சமயம் கோபாலசாமி கட்சியின் சம்மதத்துடன் யாழ்ப்பாணம் வந்து தலைவர் பிரபாகரனைச் சந்தித்திருந்தார்.

அப்போது இந்திய அமைதிப்படையினர் தன்னைச் சுற்றி வளைத்தனர் என்றும்—

அச்சம்பவத்தில் புலிப் போராளி ஒருவர் உயிரிழந்தார் என்றும் —

புலிகளினால் தான் தாம் அப்போது உயிர் தப்பியதாகவும்—

தமது வாழ்வு, புலிகள் அளித்த உயிர்ப்பிச்சை என்றும்— கோபாலசாமி சமீபத்தில் தெரிவித்திருந்தார்.

''நான் யாழ்ப்பாணம் சென்ற பின்னர், இந்திய அமைதிப்படைத் தளபதி கல்கத், சென்னையில் கருணாநிதியைச் சந்தித்தார். இச் சந்திப்பின் மறுநாள் நான் யாழ்ப்பாணத்துக்கு தனிப்பட்ட விஜயமே மேற்கொண்டதாக கட்சியின் செயலாளர் அன்பழகன் சென்னையில் அறிக்கை வெளியிட்டார்.

''என்னை யாழ்ப்பாணம் அனுப்பி விட்டு அங்கு வைத்து அமைதிப்படையின் உதவியுடன் ஒழித்துக்கட்ட கருணாநிதி திட்டம் தீட்டி இருக்கலாம்''

இப்படி கோபாலசாமி சமீபத்தில் சந்தேகம் எழுப்பி இருந்தார்.

### றோ அனுப்பிய தகவல்

கடைசியாக கோபாலசாமி வெளியேற்றத்துக்கு சாட்டாக அமைந்தது தமிழக அரசின் தலைமைச் செயலாளர் டி. வி. வெங்கட்ராமன் கருணாநிதிக்கு அனுப்பிய தகவல் ஒன்றே.

மத்திய அரசு இந்த தகவலை வெங்கட்ராமனுக்கு அனுப்பி இருந்தது.

கோபாலசாமியை தி. மு. க. தலைவர் ஆக்குவதற்காக கருணாநிதியைத் தீர்த்துக் கட்ட விடுதலைப் புலிகள் இயக்கம் திட்டமிட்டிருப்பதாக இந்திய உளவு நிறுவனமான 'றோ' வுக்கு உறுதிப்படுத்தப்படாத தகவல் கிடைத்திருப்பதாக அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

கருணாநிதிக்குப் பாதுகாப்பு வழங்க மத்திய அரசு விரும்புவதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. கருணாநிதியின் அனுமதியும் அதற்காகக் கோரப்பட்டிருந்தது.

விடுதலைப்புலிகளின் சர்வதேச செய்தித் தொடர்பாளர் லோரன்ஸ் திலகர், இதனை பாரிஸில் மறுத்திருந்தார். அதன் பின்பும் கருணாநிதி இதனை பெரிதுபடுத்த முயன்றார். இதனை வைத்து கோபாலசாமிக்கு இறுதி அடி கொடுக்க திட்டமிட்டார்.

அவசரம் அவசரமாக செய்தியாளர் மாநாட்டைக் கூட்டி இது பற்றி அறிவித்து, தமக்கு மத்திய அரசு வழங்குவதற்கு விருப்பம் தெரிவித்த பாதுகாப்பையும் ஏற்பதற்கு இணக்கம் தெரிவித்தார்.

கட்சியைப் பிளவுபடுத்த சதி செய்வதாக கடந்த காலங்களில் மத்திய அரசையும்

### வெளி உலகில்

உளவு நிறுவனமான றோவையும் திட்டித் தீர்த்து வந்தவர் கருணாநிதி.

ஆனால் இந்த உறுதிப்படுத்தாத தகவலை கருணாநிதி அப்படியே ஏற்றுக் கொண்டதற்கு இரு காரணங்கள் தெரிவிக்கப்படுகின்றன.

★ கோபாலசாமியை வெளியேற்றுவது மூலம் தமது குடும்ப ஆதிக்கத்தை கட்சிக்குள் மீண்டும் நிலை நாட்ட முடியும்.

★ விடுதலைப் புலிகள் ஆதரவாளரான கோபாலசாமியை வெளியேற்றுவது மூலம் இந்திரா காங்கிரஸுடன் தேர்தல் கூட்டை ஏற்படுத்திக் கொள்ள முடியும்.

விடுதலைப் புலிகளுக்கு உதவினார் என்ற குற்றச்சாட்டில் கோபாலசாமியின் சகோதரர் ரவிச்சந்திரன் 'தடா' சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டார்.

காயம் அடைந்த புலிப் போராளிகள் சிலருக்கு திருநெல்வேலியில் உள்ள தமது வீட்டில் வைத்து சிகிச்சை அளித்தார் என்று ரவிச்சந்திரன் மீது குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளது.

இத்தனைக்கும் மத்தியில் கோபாலசாமி தனது தமிழீழக் கொள்கையில் உறுதியாக இருந்து வந்தது இந்திராகாங்கிரஸுடன் தி. மு. க. உறவை ஏற்படுத்துவதற்கு இடைஞ்சலாக இருந்தது.

தமிழக ஆளுநர் சென்னாரெட்டியை நீக்கும்படியும், தமிழக காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தியை அகற்றும்படியும் தமிழக முதல்வர் ஜெயலலிதா விடுத்த நிபந்தனை காரணமாக அ.தி.மு.க. — இந்திரா காங்கிரஸ் கூட்டணி வாய்ப்புக்கள் அருகிப் போய்விட்டன.

பழனி, ராணிப்பேட்டை தேர்தல் முடிவுகள் அ.தி.மு.கவின் பலத்தை மீண்டும் நிரூபித்திருப்பதால், அடுத்த தேர்தலில் காங்கிரஸுடன் கூட்டணி அமைப்பது மூலமே அ. தி. மு. கவைத் தாக்கடிக்க முடியும் என்று கருணாநிதி நம்புகிறார்,



கோபாலசாமி

இதற்கு இதுவரை தடையாக இருந்தவர்தான் இந்த கோபாலசாமி.

### குடும்ப ஆதிக்கம்

கருணாநிதியின் குடும்ப ஆதிக்கம் தி.மு.கவில் நீண்ட காலமாக — அதாவது கட்சியில் எம். ஜி. ஆர். இருந்த காலத்திலேயே நிலவி வருகிறது.

தனது குடும்பத்தைத் தவிர்ந்த மற்றையோர் தனக்குப் பிறகு தலைமைப் பதவியைப் பெறக்கூடாது என்பதில் கருணாநிதி திட்டமிட்டுச் செயற்பட்டு வந்தார்

1970 இல் எம். ஜி. ஆர். கட்சிக்குள் செல்வாக்குப் பெற ஆரம்பித்த சமயம் கருணாநிதியின் முதல் மனைவி பத்மாவதியின் மகன் மு. க முத்து எம். ஜி. ஆருக்கு சவாலாக இருந்து வந்தார்.

எம்.ஜி ஆரின் செல்வாக்கை உடைப்பதற்காக முத்துவை கட்சியில் முன்னணிக்கு கொண்டுவர கருணாநிதி முயற்சித்தார்.

அதே கருணாநிதி இன்று மற்றைய மகன்மாரான மு. க. ஸ்டாலினையும், மு. க. அழகிரியையும், மருமகன் முரசொலிமாறனையும் அரசியலில் முன்னுக்குக் கொண்டு வர முயற்சிக்கிறார். கோபாலசாமி வெளியேற்றத்தின் ரகசியம் இதுதான் என்று கருதப்படுகிறது.

தி. மு. கவில் இன்று மிக முக்கிய பிரச்சினை கட்சி என்பதைவிட சொத்து என்பது தான்.

இதனை நிர்வகிப்பவர்கள் கருணாநிதியின் குடும்பத்தவர்கள் ஆவர்.

இந்த சொத்துக்கும், கட்சிக்கும் வாரிசாக தனது மகன்மாரையும், மருமகனையும் கொண்டுவர கருணாநிதி விரும்புகிறார்.

மு. க. ஸ்டாலின் தற்போது கட்சியின் இளைஞர் அணித் தலைவராக இருக்கிறார். கோபாலசாமிக்கு எதிரான போரில் முக்கிய பங்கு வகித்து வருகிறார்,

மு. க. அழகிரி மதுரையில் இருந்து கட்சி அலுவல்களை நடத்தி வருகிறார்.

மருமகன் முரசொலிமாறன்

**சஞ்சாரன்**

கட்சியின் தேசிய அளவிலான கொள்கைகளைத் தீர்மானிப்பவர்.

முரசொலிமாறனின் சகோதரன் முரசொலிச் செல்வத்தின் கட்டுப்பாட்டிலேயே முரசொலி பத்திரிகை இயங்கி வருகிறது,

இவர்களைவிட கருணாநிதியின் இரு மனைவிமாரான தயாளு அம்மாளும், ராஜாத்தி அம்மாளும் கட்சிக்குள் செல்வாக்குப் பெற முனைந்து வருகின்றனர்.

கோபாலசாமியை வெளியேற்றியதன் மூலம் இந்திரா காங்கிரஸுடன் கூட்டுச்சேரவும் தமது குடும்ப ஆதிக்கத்தை மீண்டும் நிலைநாட்டவும் வழி அமைத்துள்ளார் கருணாநிதி. அதாவது ஒரே கல்லில் இரு மாங்காய்.

ஆனால், தற்போதைய தி. மு. க. அரசியல் சூழ்நிலை கழகம் கலைஞரிடமும் தொண்டர் கோபாலசாமியிடமும் என்ற நிலையை ஏற்படுத்தி இருக்கிறது. ★

சூரிய காந்தி
உதயன் ஞாயிறு
சிறப்பம்சம்

# நரசிம்மராவின் தலைமைக்கு ஆபத்து
## மாநிலத் தேர்தலால் ஏற்படுமா?

*இந்தியாவின் இந்தி பேசும் வடமாநிலங்களான உத்தரப்பிரதேசம், இமாசலப்பிரதேசம், மத்தியப்பிரதேசம், ராஜஸ்தான், புதுடில்லி ஆகியவற்றில் நடந்த சட்டசபைத் தேர்தல்களில் அளிக்கப்பட்ட வாக்குகள் எண்ணப்படுவது நேற்று ஆரம்பமாகின. இந்திய அரசியலில் இத்தேர்தல் முடிவுகள் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தலாம் எனக் கருதப்படுகிறது.*

இந்திரா காங்கிரஸின் தலைமைப் பதவியை நரசிம்மராவ் தக்க வைத்துக்கொள்வாரா?

இந்தியாவின் மத்திய ஆட்சியை அடுத்த பொதுத்தேர்தலில் காங்கிரஸ் கட்சி மீண்டும் கைப்பற்றுமா?

இக்கேள்விகளுக்கு வட இந்திய வாக்காளர்கள் இவ்வாரத்தில் விடையளிக்கப் போகின்றார்கள்.

வட இந்திய மாநிலங்கள் பலவற்றில் இம்மாதம் சட்டசபைத் தேர்தல்கள் நடைபெற்றன. எல்லா சட்டசபைத் தேர்தல்களும் ஒரு விதத்தில் முக்கியமானவையாக இருந்தாலும்—உத்தரப்பிரதேசம், மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான் மற்றும் இமாசலப் பிரதேசம் ஆகியவற்றுக்கான சட்டசபைத் தேர்தல்கள் இந்திய நாட்டின் தலைவிதியை நிர்ணயிக்கும் தேர்தல்களாக அமைய உள்ளன.

இதுவரை காலமும் மத்திய அரசின் நேரடி நிர்வாகத்தின் கீழ் இருந்து வந்த புதுடில்லி யூனியன் பிரதேசம் முதல் தடவையாக சட்டசபை அந்தஸ்தைப் பெற்றுள்ளது. இதற்கும் இம்மாதம் முதல் தடவையாகத் தேர்தல் நடைபெற்றுள்ளது.

### அயோத்தி விவகாரம்

கடந்த ஆண்டு டிசம்பர் 6இல் உத்தரப்பிரதேச மாநிலம்— அயோத்தியில் இருந்த பாப்ரிமசூதி, இந்து மதவாதிகளால் இடிக்கப்பட்டது. அப்போது பாரதீய ஜனதாக் கட்சியே உத்தரப்பிரதேச மாநில ஆட்சியை நடத்திவந்தது. தாம் ஆட்சிக்கு வந்தால் ஸ்ரீராமர் பிறந்த இடத்தில் உள்ள பாப்ரி மசூதியை இடிப்போம் என்ற வாக்குறுதியை பாரதீய ஜனதாக் கட்சி 1991 தேர்தலில் மக்களுக்கு அளித்திருந்தது. அதன்படி அமோக வெற்றி பெற்று பதவிக்கு வந்த பாரதீய ஜனதா மாநில அரசு அந்த வாக்குறுதியைக் காப்பாற்றியது. அது நாட்டில் மதக் கலவரத்தைத் தோற்றுவித்தது.

ராமர் ஆலய விஷயத்தில் பிரதமர் நரசிம்மராவ் கடைப்பிடித்த அசமந்தப்போக்கு, மத்தியில் மயிரிழையில் தொங்கிக்கொண்டிருக்கும் தமது காங்கிரஸ் அரசிற்கு நாடாளுமன்றத்தில் ஆபத்து ஏற்படாமல் தடுப்பதற்கு பாரதீய ஜனதாவை நரசிம்மராவ் நம்பிச் செயல்பட்டது ஆகியவைதான் பாப்ரி மசூதி இடிக்கப்படுவதைத் தடுக்க முடியாமற் போனதற்குரிய காரணங்கள் என்று அவரின் அதிருப்தியாளர்கள் கண்டனக்குரல் எழுப்பினார்கள்.

அதனைத் தொடர்ந்து நரசிம்மராவ் பாரதிய ஜனதா மாநில அரசுகள் மீது கடும் போக்கைக் காட்டத்தொடங்கினார். முடிவு— ஒரே நாளில் உத்தரப்பிரதேசம், மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான், இமாசலப் பிரதேசம் ஆகியவற்றின் பாரதிய ஜனதா அரசுகள் கலைக்கப்பட்டன.

### இந்திரா காங்கிரஸ்

இந்திரா காங்கிரஸில் உட்கட்சிப் பூசல் அதிகரித்துள்ள நிலையில் இம்மாநிலத் தேர்தல்களை அது சந்தித்துள்ளது.

அயோத்தி விவகாரத்தில் தீர்க்கமான முடிவுகளை எடுத்துச் செயல்பட அது தவறியதால் இம்முறை முஸ்லிம்களின் வாக்குகளை பெருமளவில் இழக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

நரசிம்மராவின் தலைமையை நீக்கி, வட இந்திய, இந்தித் தலைமையை இந்திரா காங்கிரஸில் ஏற்படுத்தினால் மட்டுமே வடமாநிலங்களில் அலையாக உருவெடுத்து வரும் பாரதீய ஜனதாவின் இந்து அடிப்படைவாத வளர்ச்சியை நிறுத்த முடியும் என்று அர்ஜுன்சிங் தலைமையிலான அதிருப்தியாளர்கள் உறுதியாகக் கூறுகின்றனர்.

தங்கள் திட்டத்தைச் செயற்படுத்த காங்கிரஸின் செயற்குழுக் கூட்டங்களில் முயன்று தோல்வியடைந்த அதிருப்தியாளர்கள் தற்போது நடந்துள்ள மாநிலத் தேர்தல்களின் முடிவுகளை பெரிதும் நம்பியுள்ளனர்.

நரசிம்மராவின் தலைமையில் அடுத்த நாடாளுமன்றத் தேர்தலில் இந்திரா காங்கிரஸ் மத்திய ஆட்சியைப் பிடிக்கமுடியாது என்பதே அர்ஜுன்சிங் குழுவினரின் திடமான கருத்தாகவுள்ளது.

### பாரதீய ஜனதா

மதத்தை அரசியலில் கலப்பதன்மூலம் மத்திய ஆட்சியைப் பிடிப்பதையே இலக்காக வைத்துக்கொண்டு பாரதீய ஜனதாக் கட்சி செயல்பட்டு வருகின்றது.

தேர்தல் பிரசாரத்தின் போது தேசியக் கொள்கைகளை மக்கள் முன்வைக்க இக்கட்சி முயன்றது. என்றாலும் அதன் வெற்றித் 'துரும்பாக' இந்து மதவாதமே முக்கியத்துவம் பெற்றது. பாரதீய ஜனதா தலைவர்களின் சிந்தனையில் மதமே தொடர்ந்து ஆதிக்கம் செலுத்தி வருகின்றது.

**தீபன்ராஜா**

இத்தேர்தலில் காங்கிரஸில் நிலவும் உட்கட்சிப்பூசல் மற்றும் நாட்டில் மாறிவரும் அரசியல் சமநிலை ஆகியனவற்றைத் தமது வெற்றிக்குப் பயன்படுத்தவே பாரதீய ஜனதாக்கட்சி முயற்சித்துவந்தது.

### ஜனதா தளம்

அஜித்சிங், சந்திர சேகர் ஆகியவர்கள் பிரிந்து சென்ற நாள் ... இருந்த முன்னாள் பிரதமர் வி. பி. சிங் தலைமையிலான ஜனதா தளம் மீண்டும் ஒற்றுமைப்பட்டுள்ள நிலையில் இம் மாநிலத் தேர்தல்களை சந்தித்துள்ளது.

அஜித்சிங், சந்திரசேகர் ஆகியோர் வி. பி. சிங்குடன் சேர்ந்து பிரசாரங்களில் ஈடுபட்டனர்.

இந்த ஒற்றுமை வேறு எந்த மாநிலங்களிலும் குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்தாவிடினும்— உத்தரப்பிரதேச மாநிலத்தில் கணிசமான வெற்றியைப் பெறக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### கணிப்புகள்

இம் மாநிலத் தேர்தல்களில் அளிக்கப்பட்ட வாக்குகள் நேற்று முதல் எண்ணப்பட்டு வருகின்றன.

இந்தியா ருடே, இந்தியன் எக்ஸ்பிரஸ் ஆகிய பத்திரிகைகள் தேர்தல் முடிவுகள் எப்படியாக அமையும் என்பது குறித்து கருத்துக்கணிப்புகளை நடத்தியுள்ளன.

புதுடில்லி சட்டசபைத் தேர்தலில் பாரதீய ஜனதாக் கட்சியே அறுதிப்பெரும்பான்மையைப் பெறும் என்று 'இந்தியா ருடே' கணிப்பு கூறுகின்றது.

இமாசலப்பிரதேசத்தில் காங்கிரஸுக்கு வெற்றிவாய்ப்பு இருப்பதாகவும் அக்கணிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய மத்திய அரசியலின் தலைவிதியை நிர்ணயிப்பது உத்தரப் பிரதேச மாநிலம் தான். இந்திய நாடாளுமன்றத்துக்கு ஆகக் கூடுதலான எம்.பிக்களை அனுப்பி வைக்கும் மாநிலம் உத்தரப்பிரதேசம் ஆகும் இந்த வகையில் இம் மாநிலத் தேர்தல் முடிவுகள் அனைவரின் கவனத்தையும் ஈர்த்துள்ளன

இம் மாநிலத்தின் தேர்தல் முடிவு எப்படி அமையும் என்பது குறித்து 'இந்தியா ருடே' யும் இந்தியன் எக்ஸ்பிரஸும் இருவித கணிப்புகளை வெளியிட்டுள்ளன.

பாரதீய ஜனதா இம் மாநில ஆட்சியை மீண்டும் பிடிக்கும் என்று இந்தியன் எக்ஸ்பிரஸின் கணிப்பு தெரிவிக்கிறது.

'இந்தியா ருடே' யின் கணிப்பு அதற்கு எதிராக இருக்கிறது. ஜனதா தளமும் அம் மாநிலத்தில் போட்டியிடும் இன்னொரு அரசியல் சக்தியான முலாயம் சிங் யாதவ்— கன்ஷிராம் அணியுடன் சேர்ந்து கூட்டணி அரசு ஒன்றை அமைக்கலாம் என்ற கருத்தும் எழுந்துள்ளது.

### நரசிம்மராவின் தலைவிதி

எப்படியிருப்பினும்— பி.பி. ஸியின் கணிப்புப்படி, நடந்து முடிந்த நான்கு முக்கிய மாநிலத் தேர்தல்களில் குறைந்தது இரண்டில் ஆவது இந்திரா காங்கிரஸ் வெற்றி பெற வேண்டும். இல்லையேல் ராவின் 'தலை' மைக்கு ஆபத்து நிச்சயம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

1991 இல் பிரதமரான ராவ் 'தொங்கு' நாடாளுமன்ற ஆதரவுடன் ஆட்சி நடத்தி வருகின்றார்.

தம் ஆட்சிக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட இரண்டு நம்பிக்கையில்லாப் பிரேரணைகளை வெற்றி கொண்ட அவரால்— மூன்றாவது நம்பிக்கையில்லாப் பிரேரணையைத் தோற்கடிக்க ஒரு கட்சியையே இரண்டாக உடைக்க வேண்டியதாகி விட்டது. பிளவுபட்ட அஜித்சிங் கட்சியைச் சேர்ந்த ஒரு பிரிவின் துணையுடன்தான் அவர் இப்போது ஆட்சியில் இருந்து வருகின்றார்.

இந்த நிலையில் — தற்போது நடந்து முடிந்துள்ள வட இந்திய மாநிலங்களின் சட்டசபைத் தேர்தல் முடிவுகள் அவருக்கு எதிரான இன்னொரு நம்பிக்கையில்லாப் பிரேரணையாக மாறினால்...... ராவின் தலைமை நீடிக்குமா? அல்லது திடீர் பொதுத் தேர்தல் வருமா? எல்லாம் இவ்வாரம் தெரிந்துவிடுமே?! ★

# இந்தியாவுடன் நேரடிப் பேச்சா?
## நவாஸ் ஷெரீப் எதிர்க்கிறார்

காஷ்மீர் பிரச்சினை குறித்துப் பேச்சு நடத்த இந்தியாவும், பாகிஸ்தானும் இணங்கியிருப்பதை பாகிஸ்தானின் பிரதான எதிர்க்கட்சியான நவாஸ் ஷெரீப்பின் பாகிஸ்தான் முஸ்லீம் லீக் கட்சி கடுமையாக விமர்சித்துள்ளது.

ஐ. நா. சபையின் பிரதிநிதித்துவம் இல்லாமல் இந்தியாவுடன் பேச்சு நடத்தச் செல்வதன் மூலம் பாகிஸ்தானின் கொள்கையை பிரதமர் பெனாஸிர் பூட்டோ மாற்றி அமைத்து விட்டார் என்று நவாஸ் ஷெரீப் குற்றஞ் சாட்டி உள்ளார். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூநகரியில் ஏற்பட்ட கதி இனியும் அங்கு நடக்காது

## நாடாளுமன்றில் பிரதமர் உறுதி

கொழும்பு, நவ. 28

பூநகரியில் பாதுகாப்புப் படையினரையும், பெருந் தொகையான ஆயுதங்களையும் நாம் இழந்தோம். அத்தகையதொரு நிலை இனியும் அங்கு உருவாகாது.

—இவ்வாறு உறுதியளித்தார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா.

பாதுகாப்பு அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு மீதான விவாதத்துக்குப் பதிலளித்து கடந்த வியாழக்கிழமை நாடாளுமன்றத்தில் உரையாற்றியபோது இந்த உறுதி மொழியை அவர் தெரிவித்தார்.

நாம் இராணுவ ரீதியில் புலிகளைப் பலவீனப்படுத்த வேண்டும். எமது அபிவிருத்தியில் வெளிநாட்டு மூலதனங்கள் இங்கு வருவதை புலிகள் தடுக்கவே விளைகின்றனர். கேளிக்கைகளை அரசு நடத்தவில்லை. அதை தனிப்பட்டவர்கள் தம் விருப்பப்படி செய்கின்றனர் என்றார் பிரதமர் ரணில். (ஒ-5)

# பீரங்கி குண்டினால் எமது படகு வெடித்துச் சிதறி மூழ்கியது!

## கல்முனைக் கடலில் காயத்துடன் தப்பியவர் தகவல்

கல்முனைக் கடல் பகுதியில் கடந்த வியாழக்கிழமை காலை படகை கட்டிவிட்டு, தூண்டிலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த சமயம், மூன்று படகுகளில் வந்த படையினர் எம் மீது வேட்டுக்களைத் தீர்த்ததுடன், பீரங்கித் தாக்குதலையும் நடத்தினர். பீரங்கிக் குண்டினால் எமது படகு வெடித்துச் சிதறி மூழ்கியது.

படையினரின் தாக்குதலில் படுகாயமடைந்து தப்பி வந்த மலைக்காஸ் எமலியானூஸ் பிள்ளை (குணம் – 19 வயது) என்ற இளைஞர் இவ்வாறு உதயனுக்குத் தெரிவித்தார்.

இவர் இடது கையிலுள்ள நான்கு விரல்கள் துண்டிக்கப்பட்ட நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். காலிலும் பலத்த காயம் ஏற்பட்டுள்ளது.

அவர் மேலும் கூறியதாவது:-

மூன்று படகுகளில் வந்த படையினர் அங்கு தொழிலில் ஈடுபட்டிருந்த பத்துப் படகுகள் மீதும் வேட்டுக்களைப் பொழியத் தொடங்கினர். அதை அடுத்து அந்தப் படகுகளில் இருந்தவர்கள் படகுகளை எடுத்துக் கொண்டு அவசர அவசரமாக பாஷையூர்ப் பக்கமாக விரைந்தனர். அந்தப் படகுகளைத் துரத்திச் சென்ற படையினர், அவர்களை விட்டு விட்டு எமது படகுப் பக்கமாக வரத் தொடங்கினர். எம்மை நோக்கி தொடர்ச்சியாக வேட்டுக்களும் தீர்க்கப்பட்டன.

அப்போது எனது மச்சான் யேசுதாஸ் சூடுபட்டு என் கண்முன்னாலேயே கடலில் மூழ்கினார். அதைத் தொடர்ந்து எமது படகை நோக்கி பீரங்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

பீரங்கிக் குண்டு ஒன்று எமது படகை மூழ்கடித்தது. படகு சின்னாபின்னமாகியது. அதன் பின்னர் படையினர் திரும்பிச் சென்றுவிட்டனர்.

அந்தப்பக்கம் பார்த்த போது எனது சகோதரரையும், மச்சானையும் காணவில்லை. அவர்கள் இறந்திருக்கலாம் என நினைக்கிறேன்.

பின்னர் நான் கல்முனைக் கரையை நோக்கி நீந்தினேன் அங்கு நின்ற பாஷையூர் மீனவர்கள் என்னை பாஷையூருக்கு அழைத்து வந்தனர்—என்றார்.

இந்தச் சம்பவத்தில் நாவாந்துறையைச் சேர்ந்த லூக்காஸ் யேசுதாஸ் (45 வயது) கொல்லப்பட்டார் என்றும், மலக்கியாஸ் தேவதாஸ் (40 வயது) என்பவரை காணவில்லை என்றும் நேற்று முன்தினம் உதயனில் செய்தி வெளியாகி இருந்தது தெரிந்ததே. (ஒ-15)

# புற்றுநோயால் பெருமளவு குழந்தைகள் பாதிப்பு!

கொழும்பு, நவ. 28

குழந்தைகள் புற்றுநோய்க்கு ஆளாவது நாட்டில் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்குக் காரணம் கதிரியக்கத்தினால் பாதிக்கப்பட்ட பால்மா பாவிக்கப்படுவதா என்ற சந்தேகம் கொழும்பு வட்டாரங்களில் எழுந்துள்ளதாகச் சொல்லப்படுகிறது.

இது பற்றி அணுசக்தி ஆணைக்குழுவின் அதிகாரிகளை கொழும்பு ஆங்கில நாளிதழ் செய்தியாளர் பேட்டி கண்டபோது –

இறக்குமதியாகும் பால்மா வகைகள் கதிரியக்கத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனவா என்ற பரிசோதனைக்கு கடந்த சில காலமாக உட்படுத்தப்படவில்லை என்று தெரிவித்தனர்.

இச்சோதனையை நடத்தக் கூடிய வசதிகள் ஆணைக்குழுவிடம் இல்லை என்றும் அவ்வதிகாரிகள் கூறினார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## சந்திரலேகா மீதான அசிற் வீச்சு வழக்கு டிச. 16இல்

சென்னை, நவ 28

முன்னாள் ஐ. ஏ. எஸ். அதிகாரியும் தமிழ் நாடு ஜனதாக் கட்சித் தலைவருமான திருமதி சந்திரலேகா மீது அசிற் திராவகம் வீசியதாக நான்கு பேர் மீது தொடரப்பட்ட வழக்கு எதிர் வரும் டிசம்பர் மாதம் 16 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை நகர 2 ஆவது உதவி செஷன்ஸ் நீதிமன்றத்தில் இவ் வழக்கு விசாரிக்கப்படவுள்ளது. (ஒ-எ)

# மேலும் சில செயலக கிளைகள் இடம்மாற்றம்

யாழ்ப்பாணம், நவ. 28

யாழ்.செயலகத்தில் இயங்கி வந்த மற்றும் சில கிளைகள் இடம் மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

யாழ்.செயலகத்தில் இயங்கி வந்த மாவட்ட மீன்பிடி விரிவாக்க நிலையம், புடவைக் கைத்தொழில் கிளை, சிறு கைத்தொழில் கிளை — என்பன யாழ்.சுபாஸ்விடுதிக்கும்—

புள்ளி விவரத் திணைக்களப் பிரிவு கச்சேரி நல்லூர் வீதியிலுள்ள தனியார் கட்டடத்துக்கும் தற்போது இடம் மாற்றம் செய்யப்பட்டுள்ளன. (இ-100)


## பனை-தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம்

சுன்னாகம்

# பதவி வெற்றிடம்

கீழ்க்காணும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. பதவி; **பொது முகாமையாளர்**

*கல்வித் தகைமைகள்:*

(அ) கூட்டுறவு பணியாளர் 8ஆவது சம்பளத் திட்டத்தில் சந்தைப்படுத்தல், மேற்பார்வையில் மூன்றுவருட அனுபவம்/கூட்டுறவுப் பணியாளர் 9ஆவது சம்பளத் திட்டத்தில் சந்தைப்படுத்தல், மேற்பார்வையில் ஆறு வருட அனுபவம்

அல்லது

(ஆ) கூட்டுறவுப் பணியாளர் உயர்தர சான்றிதழ்/ க. பொ. த. உயர்தரத்தில் மூன்று பாடத்துடன் நான்கு வருட அனுபவம்

*சம்பளத் திட்டம்:*

1305 — 60 X 4 — 75 X 11 — 2370

2. பதவி; **கணக்காளர்**

*கல்வித் தகைமை:*

(அ) கணக்குப்பதிவாளர், எண்பார்வை லிகிதர் பதவியில் மூன்று வருட அனுபவத்துடன் கூட்டுறவுப் பணியாளர் 9ஆவது சம்பளத் திட்டம்/கணக்குப் பதிவாளர், எண்பார்வை லிகிதர் பதவியில் ஆறுவருட அனுபவத்துடன் கூட்டுறவுப் பணியாளர் 10ஆவது சம்பளத்திட்டம்

அல்லது

(ஆ) கூட்டுறவுப் பணியாளர் உயர்தர சான்றிதழ்/ க. பொ. த. உயர்தரத்தில் மூன்று பாட சித்தி கணக்கியல் உட்பட அத்துடன் நான்கு வருட அனுபவம்.

*சம்பளத் திட்டம்:*

1165 — 60 X 3 — 75 X 11 — 2170

3. பதவி; **கணக்குப் பதிவாளர்**

*கல்வித் தகைமை:*

(அ) க. பொ. த. (சா/த) சித்தி தமிழ், கணிதம், வர்த்தக எண்கணிதம் ஆகிய பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஆறுபாட சித்தி அத்துடன் கூட்டுறவுத் தராதரப்பத்திரத்தில் சாதாரண| சித்தி எழுதுவினைஞர் பதவியில் இரண்டு வருட அனுபவம்.

*சம்பளத் திட்டம்:*

1045 — 40 X 4 — 50 X 10 — 1705

4. பதவி; **கிளை மேற்பார்வையாளர்**

*கல்வித் தகைமை:*

(அ) கூட்டுறவுப் பணியாளர் சாதாரண தர சான்றிதழ் / க. பொ. த. சாதாரண தரத்தில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாது ஆறு பாட சித்தியும், இதில் கணிதம், தமிழ் ஆகிய பாடங்களில் திறமைச் சித்தியுடன் மூன்று வருட அனுபவம்.

*சம்பளத் திட்டம்:*

1005 — 40 X 5 — 50 X 20 — 1705

மேற்கூறப்பட்ட சம்பளத்திட்டத்துடன் ஏனைய அங்கீகரிக்கப்பட்ட படிகளும் வழங்கப்படும்.

மேற்படி பதவிகளுக்கான வயதெல்லை 20 — 40 இற்கும் இடைப்பட்டதாக இருத்தல் வேண்டும். சங்கப் பணியாளருக்கு வயதெல்லை கணிக்கப்படமாட்டாது.

இப் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் யாவும் தனித்தனியாக பதிவுத் தபாலில் 10-12-1993ஆம் திகதி கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

அனுப்ப வேண்டிய முகவரி:

தலைவர்,
சுன்னாகம் பனை தென்னை வள-
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,
ஸ்ரீலங்கா வீதி, உடுவில்.

- தலைவர்.

[28177]


பாதுகாப்புப் படையினருக்காக

# மக்களிடம் பற்பசை, நுளம்புத்திரி கேட்பது அரசுக்குக் கௌரவமா?

## நாடாளுமன்றில் சிறிமாவோ கேள்வி

கொழும்பு, நவ. 28

நாட்டுக்காக உயிர்த் தியாகம் செய்யும் பாதுகாப்புப் படையினருக்காக பற்பசையும், நுளம்புச் சுருளும் பொது மக்களிடமிருந்து நன்கொடையாகக் கேட்பது அரசுக்கு கௌரவமாகுமா?

பாதுகாப்பு அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு மீதான விவாதத்தில் கடந்த வியாழக்கிழமை கலந்து கொண்டு பேசிய எதிர்க்கட்சித் தலைவர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

திருமதி பண்டாரநாயக்கா மேலும் உரையாற்றுகையில்—

நாட்டில் இனப்பிரச்சினை இல்லை, பயங்கரவாதமே உண்டு என்பதைக் கேட்டு தமிழ் மக்கள் ஆச்சரியமடைந்துள்ளனர். முழு உலகமும் இங்கு இனப்பிரச்சினை உண்டு எனக் கூறுகிறது. ஜனாதிபதி அதனை ஏற்கவில்லை.

சரியான அரசியல் தலைமைத்துவம் இல்லாமல் ஒரு யுத்தத்தில் வெல்ல முடியுமா? வழிநடத்த முடியுமா? இந்த யுத்தம் ஒழியக்கூடிய ஒன்றல்ல.

கேளிக்கைகளையும், அழகுராணிகளை வரவழைப்பதையும் விடுத்து இந்த யுத்தத்திற்குத் தீர்வு காணும் வகையில் அரசாங்கம் செயற்பட வேண்டும்—என்றார். (ஒ-5)

போட்டிப் பரீட்சைகளில் தெரிவாகியும்

# பதவியேற்காத ஆசிரியரின் இடங்களுக்கு புதியவர்கள்

## கல்விச் சேவை ஆணைக்குழு ஏற்பாடு

யாழ்ப்பாணம், நவ. 28

யாழ். மாவட்டத்தில் நடந்த ஆசிரியர் தெரிவுக்கான போட்டிப் பரீட்சைகளில் தோற்றி, நியமனம் வழங்கத் தெரிவு செய்யப்பட்ட பின்னர் இதுவரை நியமனத்தை ஏற்றுக் கொள்ளாதவர்களின் இடங்களுக்கு வேறு ஆட்கள் நியமனம் பெறவிருக்கின்றனர்.

யாழ். மாவட்டத்தில்கடந்த வருடத்தில் நடத்தப்பட்ட ஆரம்ப, கணித, விஞ்ஞான, ஆங்கில ஆசிரியர்களுக்கான போட்டிப் பரீட்சைகளில் சித்தி பெற்று, நியமனம் பெறத் தெரிவு செய்யப்பட்டவர்களில் பலர் இதுவரை தமது நியமனங்களை ஏற்றுக் கொள்ளவில்லை.

இவர்களது இடங்களுக்கு அந்தந்தப் போட்டிப் பரீட்சைகளில் அடுத்த நிலையில் புள்ளி பெற்றவர்களுக்கு நியமனம் வழங்க கல்விச் சேவை ஆணைக்குழு ஏற்பாடு செய்து வருகிறது.

வழங்குவதற்குத் தேவையான விவரங்களை கல்விச் சேவை ஆணைக்குழு கோரியுள்ளது. (உ-3)

# அலுவலகம் இடம்மாற்றம்

யாழ். செயலகத்தில் இது வரை காலமும் இயங்கி வந்த ஜேர்மன் ஜனநாயகக் குடியரசின் உதவித் திட்ட இணைப்புச் செயற்குழ அலுவலகம், கடந்த வெள்ளிக்கிழமை முதல் யாழ். இராசாவின் தோட்ட வீதியில் உள்ள யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

அண்மையில் யாழ். செயலகத்தின் மீது நடத்தப்பட்ட சுப்பர்சொனிக் குண்டு வீச்சு தாக்குதலின் போது மேற்படி அலுவலகமும் சேதமுற்றதை அடுத்தே இவ்வாறு இடம் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-162)

உள்நாட்டுக் கலவரமா?

# வெள்ளை இனத்தவரை எச்சரிக்கிறார் மண்டேலா

கேப்டவுன், நவ. 28

தென் ஆபிரிக்காவில் வெள்ளை இனத் தீவிரவாதக் கட்சிகள் உள்நாட்டுக் கலவரத்தை ஆரம்பித்தால், அது அவர்களுக்கே ஆபத்தாக முடியும்.

ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தலைவர் டாக்டர் நெல்ஸன் மண்டேலா முன்கண்டவாறு எச்சரிக்கை விடுத்திருக்கிறார்.

நிறவேற்றுமையை ஒழித்து பெரும்பான்மை கறுப்பு இனத்தவரின் கைகளுக்கு நாட்டின் ஆட்சியை ஒப்படைக்கும் புதிய அரசமைப்பை எதிர்த்து உள்நாட்டுப் போரை ஆரம்பிக்கப் போவதாக வெள்ளை இனத்தவரின் தீவிரவாத அரசியல் கட்சிகள் அறைகூவல் விடுத்துள்ளன.

இதற்குப் பதிலளிக்குமுகமாகவே திரு. மண்டேலா பதில் எச்சரிக்கையை விடுத்தார். (ஒ-எ)

# பட்டதாரிகளுக்கு உடன் ஆசிரியர் நியமனம்

யாழ்ப்பாணம், நவ. 28

வடக்கு—கிழக்கு மாகாணத்தில் 1992 ஜூன் முதலாம் திகதிக்கு முன்னர் பட்டம் பெற்ற பட்டதாரிகளை ஆசிரியர்களாக நியமிக்க கல்விச் சேவைகள் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்திருக்கிறது.

கல்வியமைச்சில் அண்மையில் நடந்த கூட்டம் ஒன்றில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் வடக்கு கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர்களும், மாவட்ட அரச அதிபர்களும் கலந்து கொண்டனர்.

1992 ஜூனுக்கு முன்னர் பட்டம் பெற்ற பட்டதாரிகள் சகலருக்கும் தென்னிலங்கையில் ஆசிரிய நியமனம் வழங்கப்பட்டுள்ளதாகவும் —

வடக்கு - கிழக்கு மாகாணத்தை சேர்ந்த பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கப்படவில்லை என்றும் —

அக் கூட்டத்தில் கலந்து கொண்ட அரச அதிபர்கள் முறையிட்டனர்.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள — இத்தகைய — பட்டதாரிகளின் விவரங்களை உடன் அனுப்புமாறும்—

அவர்களுக்கு நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் —

கல்விச் சேவைக் குழு அதிகாரி அங்கு தெரிவித்தார்.

திருமலை - காங்கேசன்துறை

# பயணிகள் கப்பல் சேவை நடைபெறமாட்டாது

யாழ்ப்பாணம், நவ. 28

திருகோணமலைக்கும் காங்கேசன்துறைக்கும், இடையில் பயணிகள் கப்பல் சேவை தற்போதைக்கு நடைபெற மாட்டாது என்று செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு அதிகாரி தெரிவித்தார்.

தற்சமயம் தீவுப்பகுதிக்கு மட்டுமே பயணிகள் கப்பல் சேவை நடத்தப்படுவதாகவும் —

தற்போதைய காலநிலையால் காங்கேசன்துறைக்கும் திருமலைக்கும் இடையில் பயணிகள் கப்பல் சேவை நடத்த முடியாதுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

திருகோணமலையில்இருந்து 125 பயணிகளுடன் கப்பல் ஒன்று காங்கேசன்துறைக்கு வரவிருப்பதாக இலங்கை வானொலி செய்தி குறித்து [illegible] விளக்கத்தை அவர் அளித்தார். (இ-3)


சிமெந்து பொதுத்தொழிலாளர் சங்கத்தின்

## விசேட பொதுக்கூட்டமும்

ஒய்வு கால மரண சகாய நிதிச்சங்கத்தின்

## 5ஆவது ஆண்டுக் கூட்டமும்

சிமெந்து பொதுத்தொழிலாளர் யூனியனின் விசேட பொதுக்கூட்டமும், தொழிற்சாலையில் இயங்கி வரும் ஓய்வுகால மரண சகாய நிதிச்சங்கத்தின் 5ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டமும் 04-12-93ஆம் திகதி சனிக்கிழமை காலை 9மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெற இருக்கின்றது.

இக்கூட்டத்திற்கு சகல தொழிற்சாலை ஊழியர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

மேலும் 1988, 1989ஆம் ஆண்டுகளில் வேலை செய்து இளைப்பாறிய / இறந்த, விலகிய ஊழியர்கள் நேரடியாக சங்கக்காரியாலயத்தில் 29ஆம் திகதி முதல் 03-12-93ஆம் திகதிக்குள் காலை 9 மணி தொடக்கம் 12 மணிவரை செயலாளரைச் சந்திக்கவும்.

நா. நடராசா
(சங்கத்தலைவர்)

(சி-6620)



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

# புதிய மாணவர்கள் பதிவு செய்தல் - 1992/93 கல்வியாண்டு

யாழ். பல்கலைக்கழகத்தில் வெவ்வேறு கற்கை நெறிகளுக்கு 1992/93 கல்வியாண்டிற்கு அனுமதிக்கப்பட்டோர் தங்கள் பதிவை கீழ்க்குறிப்பிட்ட திகதிகளில் மேற்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

| | | |
|---|---|---|
| விஞ்ஞானம் | — | 09-12-93 உம் 10-12-93 உம் |
| கலைப்பீடம் | — | 13-12-93 உம் 14-12-93 உம் |
| மருத்துவபீடம் / விவசாயபீடம் | — | 15-12-93 |

மேலதிக விவரங்கள் யாழ். பல்கலைக்கழக பரீட்சைகள் அனுமதிகள் கிளையில் பெற்றுக் கொள்ளலாம்.

தபால் மூலமும் பதிவுகள் 30-12-93 வரையும் ஏற்றுக் கொள்ளப்படும். தேவையான விண்ணப்பப்படிவங்கள் விவசாயபீடம், கிளிநொச்சி, இணைந்த பல்கலைக்கழக கல்லூரி, வவுனியா, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிலும் பெற்றுக் கொள்ளலாம்.

தெரிவு செய்யப்பட்ட மாணவர்களில் எவரேனும் 30-12-93இற்கு முன்பு பதிவை மேற்கொள்ளாவிடின் அவரது தெரிவு இரத்துச் செய்யப்பட்டு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு அறிவிக்கப்படும்.

அனுமதிக்கப்பட்ட மாணவர்கள் பின்வரும் ஆவணங்களை பதிவின்போது சமர்ப்பித்தல் வேண்டும்.

1. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவம்
2. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அனுப்பப்பட்ட கடிதம்
3. பிறப்புச் சான்றிதழ் (மூலப்பிரதியும், நிழற்படப் பிரதியும்)
4. பாடசாலை விடுகைப்பத்திரம் (மூலப் பிரதியும், நிழற்படப் பிரதியும்)
5. 8 புகைப்பட பிரதிகள் (2'' x 2½'')
6. தேசிய அடையாள அட்டை

பின்வரும் கற்கை நெறி ஒவ்வொன்றுக்கும் பதிவுக்கு உரிய சகல கட்டணங்களையும் யாழ். பல்கலைக்கழகத்தில் காசாகச் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டு அல்லது காசுக்கட்டளை அல்லது தபாற்கட்டளையையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| விஞ்ஞானபீடம் | — | ரூபா 305/- |
| மருத்துவபீடம் | — | ரூபா 350/- |
| விவசாயபீடம் | — | ரூபா 275/- |
| கலைப்பீடம் | — | ரூபா 175/- (புவியியலை ஒரு பாடமாக பயில விரும்பும் மாணவர்கள் ஆய்வுகூட கட்டணமாக ரூபா 100/- மேலதிகமாகச் செலுத்த வேண்டும்) |

காசுக்கட்டளை / தபாற்கட்டளை, யாழ். பல்கலைக்கழக நிதியாளரின் பெயரில் எடுத்து அனுப்புதல் வேண்டும்.

(சி-6614) — பதிவாளர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

அடை வைப்பதற்கு உகந்த வெள்ளடி, பாமாஸ், பாப நிக்கல்ஸ், பன்டம், காப்பிலி பன்டம் கோழி முட்டைகளும், வெள்ளடி கோழிக் குஞ்சுகளும் விற்பனைக்குண்டு. தொடர்பு: கதிர் தேநீர்ச்சாலை, துறைமுகச் சந்தி, கொழும்புத்துறை. (28184)

ஒரு சோடி வான்கோழிகளும், பன்டம் கோழிகளும் விற்பனைக்குண்டு. நல்லூர் வீடியோ சென்ரர், இல. 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (28181)

## மணமகன் தேவை

நட்சத்திரம் மகம், செவ்வாய்க் குற்றமற்ற, 42 வயது மணப்பெண்ணுக்கு மணமகன் தேவை. தாரம் இழந்தவர்களும் விண்ணப்பிக்கலாம். சீதனம் கொடுக்கப்படும். கடித மூலம் தொடர்புகொள்ளவும்: இல. 574, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (28176)

வங்கி உத்தியோகத்தரான 8இல் செவ்வாய் உள்ள கௌரவமான இந்து மணப்பெண்ணுக்கு ஏற்ற 35 வயதிற்கு மேற்பட்ட மணமகன் தேவை. 920, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (6818)

## மணமக்கள் தேவை

ஆண், செவ்வாய்க் குற்றமுள்ள, 32 வயது என்ஜினியருக்கும், 28 வயது B.Com மாணவனுக்கும், 31 வயது ஆசிரியருக்கும், 39 வயது அரசாங்க உயர் பதவியுள்ள பெண்ணுக்கும் தேவை. மங்கள ஏஜென்சி, கொய்யாத் தோட்டம். (28194)

## மணப்பெண்கள் தேவை

குற்றமுள்ள 35 வயது, சிவில் என்ஜினியருக்கும், சைவ போசன 43 வயது அரசாங்க உத்தியோகத்தருக்கும், 36 வயது குற்றமற்ற வர்த்தகருக்கும், கத்தோலிக்க 37 வயது பட்டதாரி ஆசிரியருக்கும் தேவை. மங்கள ஏஜென்சி, கொய்யாத் தோட்டம். (28193)

## இலவச திருமண சேவை

33 வயது, திருவாதிரை 3ஆம் பாதம், நட்புப் பெற்ற லக்கினத்துச் செவ்வாயுள்ள பிரான்ஸ் மணமகனுக்கு அழகிய மணமகள் ஐரோப்பிய நாடுகளில் வேண்டப்படுகிறது. இங்கும் வந்து திருமணம் செய்வார். விமலா, இலவச திருமண சேவை, யாழ். நாசசிமார் கோவிலடி. (28172)

## இடமாற்றம

சாவகச்சேரி பஸ் நிலையத்திற்கு அருகில் இயங்கிவந்த சோதி புத்தகசாலையும், தனன்கிளப்பு வீதியில் இயங்கி வந்த சோதி அச்சகமும் கச்சாய் வீதியில் உள்ள வர்த்தகத் திணைக்கள மக்கள் கடைக்கு அருகில் மாற்றப்பட்டுள்ளது என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம் (சி-6609)

## தையல் வகுப்புகள்

Scientific Dress Making புதிய வகுப்புகள் 01-12-93 இல் ஆரம்பம் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: இல. 376, நாவலர் வீதி, கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம். (2·116)

## வாசித்து விட்டீர்களா?

திரு. சு. டிவகலால, திரு. தி. சிறீனிவாசன், திருமதி ராணிரத்னதேவி, திரு. சின்னத்தம்பி கட்டுரைகளும், ''கார்த்தி''யின் நகைச்சுவைகளும் அடங்கிய ''மக்கள் நேசன் கார்த்திகேசன் மாஸ்ரர்'' புத்தகசாலைகளில் கிடைக்கும். (28190)

## G. C. E. (O/L) வர்த்தகம்

வர்த்தகம் வினா-விடைத் தொகுப்பு வெளிவந்து விட்டது. ஆண்டு 11, 10, 9 பாடத்திட்டத்தை உள்ளடக்கியது. ஆண்டு 9 இற்கான கனிஷ்ட தொழில் நுட்பச் சான்றிதழ் பரீட்சைக்கான கணக்கீடு பயிற்சி நூலும் சகல புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். ஆக்கம்: த. தர்மராஜன். (28195)

---

பச்சிலைப்பள்ளி

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், பளை

# முக்கிய அறிவித்தல்


1967/68 காலபோகம் தொடக்கம் 1978 சிறுபோகம் வரை எமது சங்கத்தில் பன்முகப்படுத்தப்பட்ட விவசாயக்கடன் திட்டத்தின்கீழ் கடன்பெற்று தவணை தப்பிய விவசாயிகள் 31 - 3 - 1994க்கு முன் கடன் முழுவதையும் முற்றாகச் செலுத்தினால் எவ்வித வட்டியும் அறவிடப்படமாட்டாது. ஆதலால் இச்சலுகையை பயன்படுத்தி கடனிலிருந்து விடுபடுவதுடன் மீண்டும் கடன்பெறும் தகைமையையும் பெற்றுக் கொள்ளுங்கள்.

ச. யோகராசா.
பொது முகாமையாளர்.

28 - 11 - 1993 (சி-6400)

---

# IN MEMORIAM
## FIRST DEATH ANNIVERSARY



REV.

**NESAKUMAR KADIRGAMAR**
(M. A., M. Th.)

Presbyter, Madurai Diocese, Church of South India

BORN: 05 — 12 — 1948
DEPARTED: 28 — 11 — 1992

"I rejoiced when they said to me,
LET US GO TO THE HOUSE OF THE LORD"
Ps. 122

Fondly Remembered by his -
Mother Grace Nesam Kadirgamar
and Family.

Christian Theological Seminary,
Chunnakam. (C-6557)

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



## திருபதி அன்னம் மயில்வாகனம்

மறைவு: 30 — 10 — 1993

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காகவும், எமது உயர் வாழ்விற்கு வழிகாட்டியாகவும் விளங்கிய எங்கள் குல தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

எமது அன்புத் தெய்வத்தின் இறுதிக் கிரியைகளில் கலந்து, அஞ்சலி செலுத்திய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது இதயங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

மக்கள், மருமக்கள் பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

'நாகரத்தின வில்லா'
கொக்குவில். (28186)

---

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்

# கணனி கல்வி நிலையங்களுடன்

இணைந்து நடத்தும்

# கணனி, இலத்திரனியல் கண்காட்சி

1993 நவம்பர் 10 ஆம், 11 ஆம், 12 ஆம் திகதிகளில் யாழ். பல்கலைக்கழகத்தில் நடத்துவதற்கென விளம்பரப்படுத்தப்பட்டு 10 ஆம் திகதியுடன் இடைநிறுத்தப்பட்ட மேற்படி கண்காட்சி, மீண்டும் 1993 டிசம்பர் 1 ஆம், 2 ஆம், 3 ஆம் திகதிகளில் யாழ். பல்கலைக்கழகத்தில் நடத்தப்படுமென்பதை அறியத் தருகின்றோம்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

**பிரவேசம்: ரூபா 10/-**
**சிறுவர்களுக்கு: ரூபா 5/-**

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்
[சி-6608]

---

# ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 24 — 06 — 1912
மறைவு: 09 — 12 — 1992

## அமரர் சபாபதி மார்க்கண்டு
(இளைப்பாறிய அதிபர்)

திதி: 28 - 11 - 1993

கார்த்திகைத் தீபமேற்றக் காத்து நாம் இருந்த வேளை
காலன் உம் உயிரைநாடிக் கவர்ந்துதான் -
சென்றதேனோ
அறிவுயர் அதிபராக அயராது உழைத்து வந்தீர்
அன்புடன் சமூகசேவை யாற்றிடும் தொண்டரானீர்
கடமையே பெரிதென் றெண்ணிக் கண்ணியத்துடனே-
வாழ்ந்தீர்
கமத்தொழில் தனையும் நல்ல கருத்துடன் செய்து -
வந்தீர்
அன்புடன் அறிவையூட்டி அணைத்தெமை -
வளர்த்தீர் ஐயா
எந்தையே உம்மை நாமும் எப்படி மறப்போம் ஐயா!

இறைவனடி சேர்ந்த உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

543, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (28170)

---

# ஓராண்டு நினைவஞ்சலி



## கந்தையா கனகசபை

எங்கள் குடும்பத்தில் ஒளி வீசி, எல்லோரினதும் பேரன்பைப் பெற்று இறைபாத நிழல் அடைந்த அன்பு அப்பாவே! நீங்கள் மறைந்து ஓராண்டு சென்றாலும் உங்கள் நினைவு எங்கள் உடல் அழியும் மட்டும் நிழலாடிக் கொண்டிருக்கும். எங்கள் குடும்பத்தில் வெற்றிடம் இருந்தாலும், நீங்கள் எங்கள் உள்ளத்திலும் இல்லத்திலும் வாழ்வீர்கள் என்ற நம்பிக்கையில் வாழ்கிறோம். நீங்கள் மறைந்து ஓராண்டு பூர்த்தியாகும் இன்று உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

''கோகுல வாசா'',
லிங்கம் ஸ்ரோர்ஸ்,
இணுவில். [28189]

---

நல்லூர்

# ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலய

பௌர்ணமி தீப அரங்கிசை

# 3ஆம் ஆண்டு நிறைவு விழா

காலம்: 28 — 11 — 1993 ஞாயிறு
மாலை 6மணி

இடம்: நல்லை ஆதீன கலாமண்டபம்

நிகழ்வுகள்

மங்கள இசை, அருளுரை, சிறப்புரைகளுடன், இளங்கலைஞர்களின் வீணை, வயலின் இசை நிகழ்வுகள், அதனைத் தொடர்ந்து,

சிறப்பு இசையரங்கு

பாட்டு — சங்கீத பூஷணம் S குமாரசாமி
வயலின் — வித்துவான் R. S. கேசவமூர்த்தி
மிருதங்கம் — கலாவித்தகர் க. கண்ணதாசன்
கடம் — வித்துவான் ப. ரதிரூபன்

பக்தரஞ்சனி

மெல்லிசை வாணர்கள்;
G. சாந்தன், ஜே. சுகுமார்
இணைந்து வழங்கும்
✲ இசை நிகழ்வு ✲

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

— தீப இசையரங்கு அமைப்பாளர்கள்.

(28192)

---

# ST. JOHN'S COLLEGE
## JAFFNA

1. ஆண்டு — 9
2. க. பொ. த. (உயர்தரம்) — ஆண்டு — 12.
   விஞ்ஞானம், வர்த்தகம்.

மேற் குறித்த இரு வகுப்புகளிற்கும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

(அ) விண்ணப்பப்படிவங்களை கல்லூரி காரியாலயத்தில் 29 - 11 - 1993 தொடக்கம் 08-12-1993 வரை பெற்றுக் கொள்ளலாம்.

(ஆ) விண்ணப்பங்கள் ஏற்கப்படும் இறுதி நாள் 13-12-1993 ஆகும். விண்ணப்பப்படிவத்தில் பாட நெறி தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

(இ) விண்ணப்பப்படிவங்களை ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாட்களில் கல்லூரி காரியாலயத்தில் இருந்து காலை ஒன்பது மணி முதல் பிற்பகல் ஒரு மணி வரை படிவமொன்றிற்கு ரூபா 100/- செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

(ஈ) அனுமதிப் பரீட்சை;
காலம்: 22 - 12 - 1993
நேரம்: காலை 9மணி


(உ) ஆண்டு 9க்கு ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களிலும், க. பொ. த. (உ/த) ஆண்டு-12, விஞ்ஞானப் பிரிவுக்கு கணிதம், விஞ்ஞானத்திலும், வர்த்தகப் பிரிவிற்கு வர்த்தகம், சமூகக்கல்வியிலும் பரீட்சை நடைபெறும்.

— அதிபர்.

[சி-6375]

---

# 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 18 — 11 — 1936
உதிர்வு: 04 — 12 — 1987

## அமரர் இ. பஞ்சாட்சரம்
(அருள் முருகன் நகைமாளிகை, 96/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்)

திதி: 28 - 11 - 1993

'நினையாத நேரம் அணைந்த ஒளிவிளக்கே!
ஆண்டுகள் ஆறு ஓடி மறைந்தாலும் ஆறிடுமோ -எம்
துயரம் மீண்டும் வரும் நினைவலையால் உருகியழும்
எம்முள்ளம் எந்நாளும் உங்களையே
எண்ணுதப்பா தங்கள் ஆசியும், அறிவுரையும்
எம்மை வழி நடத்துமப்பா!'

என்றும் தங்கள் ஆத்மா சாந்தியடைய வேண்டிநிற்கும்:

மனைவி, மக்கள்,
மருமகன், பேர்த்தி.

பெருங்குளம் பிள்ளையார் வீதி,
சாவகச்சேரி. (28178)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## நொண்டிச்சாட்டு

கிழக்கு மாகாணத்தில் உள்ள உள்ளூராட்சிச் சபைகளுக்கும் வவுனியா நகர சபைக்குமான தேர்தல்கள் பின்போடப்பட்டிருப்பதாக நேற்று முன்தினம் ஜனாதிபதி செயலகம் அறிவித்திருக்கிறது.

கால எல்லை குறிப்பிடப் படாது இத்தேர்தல்கள் ஒத்தி வைக்கப்பட்டிருக்கின்றன.

பூநகரியில் புலிகள் நடத்திய அதிரடியில் சித்தம் கலங்கிப் போன ஸ்ரீலங்கா அரசு, மக்களினதும் எதிர்க்கட்சிகளினதும் கவனம் இராணுவ இழப்புகளின் பக்கம் திரும்பாமல் இருக்கச் செய்வதற்காக— படை அழிவுகளால் பொது மக்கள் சீற்றமுற்று அரசுக்கு எதிராக கிளர்ந்து எழுவதைத் தவிர்ப்பதற்காக — யுக்தி ஒன்றைக் கையாண்டது

அந்த யுக்தி தான் இரண்டாவது தேர்தல் அறிவிப்பு.

இந்தத் தேர்தல் அறிவிப்பு மூலம் மக்களினதும் எதிரணியினதும் கவனத்தைத் தேர்தல் பக்கம் திருப்பி விடலாம் என சிங்கள அரசு தப்புக் கணக்குப் போட்டது.

தேர்தல் அறிவிப்பு வெளியிட்ட கையோடு, அதை ஒத்திவைப்பது பற்றிய அறிவிப்பையும் வெளியிட வேண்டிய நிலைக்கு சிங்கள அரசு தள்ளப்பட்டுவிட்டது.

தன்முயற்சியில் தோல்வியுற்ற ஸ்ரீலங்கா அரசு இப்போது ''விழுந்தவன் மீசையில் மண் ஒட்டிக்கொள்ளவில்லை'' என்று கூறுவது போல நொண்டிச் சாட்டுகளைக் கூற முயற்சிக்கிறது.

வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்ய போதிய கால அவகாசம் வழங்கப்படவில்லை என்றும்—

நாடாளுமன்றத்தில் தற்போது நடைபெற்று வரும் வரவு - செலவுத் திட்டத்தின் மீதான விவாதம் காரணமாக வேட்பாளர் பட்டியல்களைப் பூர்த்தி செய்ய முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாகவும்—

அரசியல் கட்சிகள் தெரிவித்திருப்பதால் இந்தத் தேர்தல்களை ஒத்திவைக்க முடிவு செய்யப்பட்டிருப்பதாக அரசு காரணம் கூறியிருக்கிறது.

''ஆடத் தெரியாதவள் அரங்கு கோணல்'' என்று கூறுவது போல, உண்மையில் வடக்கு — கிழக்கில் தேர்தல்களை நடத்த முடியாத— இயலாத — நிலையில் இருக்கும் அரசு அதற்கு வேறு காரணங்களைக் கூறித் தப்பித்துக்கொள்ள முயற்சிக்கிறது.

ஆனால் செய்தி ஏஜென்ஸிகள் சிங்கள அரசின் நிலையைத் தெட்டத் தெளிவாக வெளிப்படுத்திவிட்டன.

பல விஷயங்கள் குறித்து அரசின் கொள்கைகள் இலக்குகள் இல்லாத குழப்பம் நிறைந்தவை என்று எதிர்க்கட்சிகள் ஏற்கனவே குற்றம் சாட்டி வந்துள்ளன.

அரசின் தேர்தல் அறிவிப்பும், பின்னர் தேர்தலை ஒத்திவைப்பதான அவசர அறிவிப்பும் இந்தக் குற்றச்சாட்டு உண்மையானது தான் என்பதை நிரூபித்திருக்கிறது.

கிழக்கில் தேர்தலை உடன் நடத்துவது என்று அரசு எடுத்த முடிவு — அறிவிப்பு முட்டாள் தனமானது என்று எதிர்க்கட்சிகள் விவரித்திருக்கின்றன.

விடுதலைப் புலிகளின் இணக்கமின்றி கிழக்கில் தேர்தலை சுமுகமாக நடத்தக் கூடிய பலம் இராணுவத்திடம் இல்லை என்பதை பூநகரி முகாம் அழிப்பு அம்பலப் படுத்திய பின்னரும் —

கிழக்கில் தேர்தல்களை நடத்துவது விடுதலைப் புலிகளைச் சீண்டி விடும் செயல் என கிழக்கு மாகாண அரசியல் வாதிகள் அரசுக்கு எடுத்துக் கூறியிருந்த பின்னரும் கூட —

தேர்தல் பற்றிய அறிவிப்பை விடுத்த அரசு இப்போது அந்த அறிவிப்பைச் செயற்படுத்திக் காட்ட வேண்டிய கட்டாய நிலை வந்ததும் பின்வாங்கி நொண்டிச் சாட்டுகளைக் கூறுகிறது.

அவசரப்பட்டு அறிவிப்பை விடுப்பான் ஏன்? கண்டனங்களை வாங்கிக் கட்டிக் கொள்வது ஏன்?

# தமிழர் விவகாரம் ஒரு தேசத்தின் பிரச்சினை

# தெற்குத் தலைவர்களால் தீர்க்க முடியாதது

தமிழர் பிரச்சினைக்கு ஓர் அரசியல் தீர்வைக் காண்பதற்கு முயல்வதாக அரசாங்கம் காட்டுமானால், அதற்கு உதவுவதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தயார். அரசின் முயற்சி நேர்மையானதாக இருக்கும் பட்சத்தில் எமது கட்சி, கட்சி அரசியலை ஒதுக்கிவிட்டு அரசமைப்பில் திருத்தம் கொண்டு வருவதற்குத் தேவையான மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெறுவதற்குத் தனது முழு ஒத்துழைப்பையும் நல்கும்.

இவ்வாறு தெரிவித்திருப்பவர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தர்மசிறி சேனநாயக்கா. அவரது இந்தச் சிறிய குறிப்பிலிருந்து பல விடயங்கள் வெளிப்படுகின்றன.

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதில் ஆளுங்கட்சி நேர்மையாக நடந்து கொள்ளவில்லை. கபடத்தனமாக, போலித்தனமாக நடந்து கொள்கிறது என்பது அவரது பிரதான குற்றச்சாட்டு. அந்தக் குற்றச்சாட்டு முற்றிலும் சரியானது. இனப்பிரச்சினையைத் தீர்க்க அரசு விரும்பவில்லை. இராணுவ ஆதிக்கத்தை வலுப்படுத்தி தமிழர்களைத் தொடர்ந்து அடக்கி ஆள்வதே அதன் குறிக்கோள். அதற்காகவே அரசு முழுக்க முழுக்க இராணுவத் தீர்வு என்ற நிலைப்பாட்டுக்கு வந்திருக்கிறது.

இது விடயத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும், ஆளும் கட்சிக்கும் இதுவரை பெரிதாக வேறுபாடு எதுவும் இல்லை. தேர்தல்கள் நெருங்குவதால் தெற்கில் உள்ள தமிழர்களின் வாக்குகள் மீது கண் வைத்து, வேளைக்குப் பொருத்தமாகச் சுதந்திரக் கட்சி தனது நிலைப்பாட்டை, அண்மையில் — பூநகரித் தாக்குதலின் பின்னர் — மாற்றி இருக்கிறதோ என்னவோ தெரியவில்லை! அவ்வாறு ஒரு மாற்றம் இல்லாமல் கட்சியின் செயலாளர் பி. பி. ஸிக்கு இப்படி ஒரு செவ்வியை வழங்கியிருக்க முடியாது என்று எண்ணுவதைத் தவிர வேறு வழியில்லை.

தெற்கின் இரண்டு பிரதான அரசியல் கட்சிகளும், தமிழர் பிரச்சினையை கட்சி அரசியலுக்குப் பயன்படுத்தியதாலேயே அது இன்றைய வடிவத்துக்கு வந்துள்ளது என்பதே உண்மை. அந்த உண்மையை இப்போது சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் வெளிப்படையாக ஒப்புக் கொண்டிருக்கிறார். அந்தளவில் ஒரு சிறு முன்னேற்றம் எனலாம்.

தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு இப்போதுள்ள அரசமைப்பில் திருத்தம் கொண்டுவர வேண்டி இருக்கும். அவ்வாறு செய்வதற்கு நாடாளுமன்றத்தில் ஆளுங்கட்சிக்குப் பலம் இல்லை. அதனை ஈடு செய்வதற்கு சுதந்திரக் கட்சி ஆதரவளிக்கும் என்பது தர்மசிறி சேனநாயக்காவின் உறுதி மொழி.

**இதுவரை உணர்ந்திருப்பர்**

விடுதலைப் புலிகள் அடுத்தடுத்து தொடராக நடத்திய மண்கிண்டிமலை, கடற்புலிகளின் அதிரடித் தாக்குதல்கள், பூநகரித் தாக்குதல்களின் பின்னர், தமிழர் பிரச்சினை ஒன்று உண்டு; அதற்கு இராணுவத் தீர்வு மார்க்கமாகாது. அரசியல் தீர்வையே நாட வேண்டும் என்பதனை இதுவரை ஜனாதிபதி விஜேதுங்காவும், அவரது அமைச்சர் குழாமும், இராணுவ உயர் அதிகாரிகளும் உணர்ந்திருப்பர்.

ஆனால் அதனை அவர்கள் இப்போது வெளிக்காட்ட மாட்டார்கள். தமது தவறான அணுகுமுறையைத் தப்பு என்று ஒப்புக்கொள்ளும் கனவான்தனம் சிங்களத் தலைவர்களுக்கு என்றுமே இருந்ததில்லை. அதேபோல யுத்த களத்தில் தாம் தோல்வி அடைந்துவிட்டதை உடனடியாக ஒப்புக்கொள்ள இராணுவத் தலைமை அதிகாரிகள் விரும்பமாட்டார்கள்.

எனினும் விழுகின்ற அடிகள் மிகப் பெரிதாக இருந்தால், இந்த வரட்டுக் கௌரவம் மறைந்து போகும். சரியான நிலையை உணர்ந்து அரசியல் தீர்வு என்ற உரிய வழிக்கு அரசு வந்தே ஆக வேண்டி வரும்.

அப்போது, தமிழர் பிரச்சினையை கட்சி அரசியலுக்கு அப்பால் — அதனை வைத்து அரசியல் லாபம் தேடும் கைவந்த கலையைக் கைவிட்டு — தீர்க்க வேண்டும் என்ற நிலைக்கு ஆளுங்கட்சி தள்ளப்படுவது தவிர்க்க முடியாததாகும்.

அப்படி ஒரு நிலைக்கு அது மாறி வந்தாலும் — திரும்பி வந்தாலும் — இனப்பிரச்சினைக்கான அதன் அரசியல் தீர்வு எதுவாக இருக்கும்?

திரு. தர்மசிறி சேனநாயக்கா கூறுவது போல, அரசியலமைப்பில் ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்து, இப்போதிருக்கும் மாகாண சபைக்குரிய அதிகாரங்களைச் சற்று விஸ்தரிப்பதாகத் தான் அமையும். தமிழர் தாயகத்தை வடக்கு கிழக்காகத் தனித்தனியே பிரித்துத் துண்டாடி, அவற்றுக்குரிய நிர்வாக அமைப்புக்கு புதிய பெயர் ஒன்றைக் கொடுத்து, அரைகுறை அதிகாரப் பரவலைக் கொண்டு வருவதாகவே இருக்கும்.

*பிரச்சினைக்குள் பிரச்சினை*

அதாவது ஆளுங்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியானாலும் சரி, எதிர்க்கட்சியான சுதந்திரக் கட்சியானாலும்

அரசியல்

சரி இப்போதிருக்கும் ஒற்றையாட்சி அரசமைப்புக்குள்ளேயே தமிழர் பிரச்சினையைத் தீர்க்க நினைக்கின்றன. இங்கேதான் இனப் பிரச்சினைக்குள் மிகப் பெரிய பிரச்சினை ஒன்று வெடித்துக் கிளம்புகிறது!

தமிழர்கள் ஒரு தனித் தேசிய இனம். அந்நியர் ஆட்சி இங்கு வருவதற்கு முன்னர் அவர்கள் தமது சொந்தத் தாயகத்தில் [illegible] மைத் தாமே ஆண்டு வாழ்ந்த இனம். எனவே இலங்கையில் இரண்டு நாடுகள் உண்டு என்ற அடிப்படையில் இருந்து மட்டுமே தமிழர் பிரச்சினைக்குரிய தீர்வை எட்ட முடியும். இதனை இப்போதுள்ள சிங்களத் தலைவர்கள் தமது வசதிப்படி மறந்துவிடுகிறார்கள்!

இற்றைக்கு 67 வருடங்களுக்கு முன்னர் — 1926 பெப்ரவரியில் — காலஞ்சென்ற எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா கூறியதை அவர்கள் கவனத்தில் எடுத்துக் கொள்வது அவசியம். அந்தக் கருத்தை நன்றாகச் சீரணித்து அதனை ஏற்றுக் கொள்ளும் பக்குவம் இருந்தால் மட்டுமே இன்றைய சிங்களத் தலைவர்களால் தமிழர் பிரச்சினையைச் சரியாக அணுக முடியும்.

''சிறுபான்மை இன மக்கள் ஒருவரை மற்றவர் அவநம்பிக்கையுடன் பார்க்கிறார்கள். இந்த வேறுபாடுகள் அடிப்படையற்றவை என்று எண்ணிவிடக் கூடாது. நூறு வருடங்களுக்கு முன்னர் இந்த வித்தியாசங்கள் இருக்கவில்லை. தமிழர்கள், கீழ் நாட்டுச் சிங்களவர்கள், கண்டியச் சிங்களவர்கள் ஆகியோரின் தலைக்கு மேல் ஆங்கிலேயர் இருந்தமையால் அந்த வேறுபாடுகள் தெரியவில்லை. அரசைத் தமது கைக்கு எடுத்துக் கொள்வது என்ற பேச்சு வந்ததும் முன்னர் உறங்கும் நிலையிலிருந்த வேறுபாடுகள் வெளியே கிளர்ந்தெழத் தொடங்கியுள்ளன......

''கடந்த கால சரித்திரத்தை எவரும் படித்துப் பார்த்தால், தமிழர்கள், கீழ் நாட்டுச் சிங்களவர், கண்டியச் சிங்களவர் ஆகிய இந்த இனங்கள் 1,000 வருடங்களுக்கு மேல் இங்கே வாழ்ந்து வருவது தெரியவரும். அவர்களில் எவருமே அப்போது இணைந்து வாழ்வதற்கான நிலைப்பாட்டை, எண்ணத்தைக் கொண்டிருக்கவில்லை என்பதும் தெரியவரும். அவர் [illegible] சமயம் ஆகியவற்றைப் பேணிப் பாதுகாத்து வந்தார்கள். இந்த வேறுபாடுகள் காலப்போக்கில் மறைந்து போகும் என்று நம்பும் எவரும் அவசரப்புத்திக்காரராகவே இருப்பர்.''

இந்த நாட்டுக்குச் சமஷ்டி அரசமைப்பு முறையே உகந்தது என்ற கொள்கையுடன் இருந்தபோது, எஸ். டபிள்யு. ஆர். டி. தெரிவித்த கருத்துக்கள் இவை. வெறும் கருத்துக்கள் அல்ல. முழுக்க முழுக்க யதார்த்தமான அரசியல் நிலை.

இதனைப் புரிந்துகொண்ட பண்டாரநாயக்காவினாலேயே தமிழர் பிரச்சினையைத் தீர்த்து வைக்கமுடியவில்லை. பௌத்த – சிங்கள பேரினவாதம் அவரைத் தடுத்துவிட்டது. அது வேறு.

*மூன்று நாடுகள்*

பண்டாரநாயக்கா கூறிய கருத்துப் பிரகாரம் இலங்கை மூன்று நாடுகளைக் கொண்டிருந்தது. கீழ்நாட்டுச் சிங்களவரும், கண்டியச் சிங்களவரும் மொழியின் பால் இணைந்துவிட்டதால் இலங்கையில் இப்போது இருவேறு நாடுகள் உள்ளன. ஒன்று தமிழர் நாடு. மற்றது சிங்களவர் நாடு. இதுவே இன்றைய நிலை.

இதனை பண்டாரநாயக்க நிறுவிய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவர்கள் உட்பட சிங்கள அரசியல்வாதிகள் ஏற்க மறுக்கிறார்கள். தமிழர்களை அடக்கி ஆள்வதன் மூலம் இனவேறுபாட்டை காலப்போக்கில் மறைத்து விடலாம் என்று நம்புகிறார்கள். சுத்த மடமை இது. தமிழர்களுக்கு ஒரு சில சலுகைகளை அல்லது மிகச் சில உரிமைகளை மட்டுப்படுத்தி வழங்குவதன் மூலம் வரலாற்று ரீதியான தமிழர் தேசத்தையும், சிங்களர் தேசத்தையும் ஒரே நாடாக வைத்திருக்கலாம் என்ற நம்பிக்கையும் இவர்களிடமுண்டு.

இப்போதுள்ள ஒற்றையாட்சி அரசமைப்புக்குள் தமிழர் பிரச்சினையைத் தீர்த்து விட இன்றைய சிங்களத் தலைவர்கள் நினைக்கிறார்கள் என்றால் —

சிங்களவர் நாட்டை ஒடுக்கும் தேசமாகவும், தமிழர் நாட்டை ஒடுக்கப்படும் தேசமாகவும் வைத்திருக்க விரும்புகிறார்கள் என்பதே அர்த்தம். ஏதோ தம்முடன் மட்டும் சம்பந்தப்பட்ட விஷயம் போலவும், வழமைப் பிர

**உதயகாந்தன்**

காரம் இப்போதைய அரசமைப்புக்குத் திருத்தம் கொண்டு வந்து தீர்த்து விடலாம் என்றும் நினைக்கிறார்கள். தமிழர்கள் என்றைக்கும் அதற்கு இடம் கொடுக்க மாட்டார்கள் என்பதை இதுவரை அவர்கள் புரிந்து கொள்ளாதிருப்பது அவர்களது துரதிர்ஷ்டமே!

*பஸ்ஸை தவறவிடுவோர்*

தமிழர் பிரச்சினையைத் தீர்க்கும் விடயத்தில் சிங்களத் தலைவர்கள் எப்போதுமே பஸ்ஸைத் தவறவிடும் பரம்பரையினராகவே இருக்கிறார்கள்! எஸ். டப்ள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவின் பிராந்திய சபைகள் திட்டத்தை அவ்வேளைகொண்டு வர அனுமதித்திருந்தால், சில வேளைகளில் தமிழர்களும் சிங்களவர்களும் இணைந்து வாழும் நிலை உருவாகியிருக்கலாம். அப்போது சந்தர்ப்பத்தைத் தவறவிட்டவர்கள். இப்போது இத்தனை வருடங்களின் பின்னரும் ஒற்றையாட்சி அமைப்புக்குள் தமிழர் பிரச்சினையைத் தீர்க்க நினைக்கிறார்கள் என்றால் அவர்களின் திமிர் எந்தளவு என்பதைப் பார்க்க வேண்டியதுதானே.

வடக்கு - கிழக்குப் பிரச்சினை என்று அரசு பெயர் மாற்றிக் கூறும் பிரச்சினை, சிறுபான்மையினர் வாழும் ஒரு தேசத்தின் பிரச்சினை என்பதனை தெற்குத் தலைவர்கள் புரிந்து கொள்ளாத வரை அவர்களால் இதனைத் தீர்க்கவே முடியாது.

*தனியரசு இலட்சியம்*

தமிழர்களின் அரசியல் போராட்டம் தமிழீழத் தனியரசை நிறுவுவது என்ற இலட்சியத்தைக் கொண்டது. இதனை தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் தமது நேற்றைய மாவீரர் தினச் செய்தியில் மிகத் தெளிவுபடக் கூறியிருக்கிறார்.

தார்மீக அடிப்படையில் நாம் ஓர் உறுதியான அத்திவாரத்தில் நிற்கிறோம். எமது போராட்ட இலட்சியம் நியாயமானது. சர்வதேச மனித அறத்திற்கு இசைவானது.

எமது மக்கள் தன்னாட்சி உரிமைக்கு உரித்தானவர்கள். தனியரசை அமைக்கும் தகுதி பெற்றவர்கள். சர்வதேசச் சட்டத்தின் அடிப்படையில் இந்த உரிமையை எவரும் நிராகரித்துவிட முடியாது.

நீதியின் அடிப்படையில், மனித தர்மத்தின் அடிப்படையில் சத்தியத்தின் அடிப்படையில் நியாயப்பாடு எமது பக்கமாக இருக்கும் பொழுது நாம் எமது போராட்ட இலட்சியத்தில் உறுதி பூண்டு நிற்க வேண்டும்— என்று தேசியத் தலைவர் வலியுறுத்தி இருக்கிறார்.

தலைவரின் கருத்து, வசனத்துக்கு வசனம், வார்த்தைக்கு வார்த்தை அர்த்தம் நிறைந்தது. தமிழர்களின் இன்றைய அரசியல் நிலைப்பாட்டையே தலைவரின் சொற்கள் பிரதிபலிக்கின்றன.

நிலைமை அவ்வாறிருக்க, தமிழர்களை மறந்து போய். அவர்களே இந்தப் பெரும் பிரச்சினையின் முக்கிய பாத்திரம் என்பதனை மறந்து போய், ஒற்றையாட்சி அரசமைப்புக்குள் பிரச்சினையைத் தீர்த்துவிடலாம் என்று தென்னிலங்கையர் நினைக்கிறார்கள். தமிழர் பிரச்சினை ஒரு தேசத்தின் விவகாரம் என்பதனைப் புரிந்து கொள்ள மறுக்கிறார்கள்.

தமிழர்களின் இலக்குக்கும், தெற்கத்தியரின் நிலைப்பாட்டுக்கும் இடையில் உள்ள இடைவெளி மலைக்கும் மடுவுக்கும் இடையில் உள்ள வெளியை விட அதிகமானது.

ஆகையால் தமிழர் பிரச்சினையைச் சிங்களவர்கள் தீர்க்க மாட்டார்கள்; தீர்க்க முடியாது. தமிழர்கள் தமது இலட்சியத்தை தாமாகவே சென்று அடைய வேண்டும். சிங்களத் தலைவர்கள் தமிழருக்கு எதிராக எடுக்கும் ஒவ்வொரு ஆக்கிரமிப்பு நடவடிக்கையும், புரியும் ஒவ்வொரு அட்டூழியமும் அந்த வழியில் தமிழர்களை முன்னே இட்டுச்செல்கின்றன!

★

## அவசர புத்தியுள்ள அவர்கள் பஸ்சை தவறவிடும் பாரம்பரையே!

சூரியகாந்தி
உதயன் ஞாயிறு சிறப்பம்சம்

# பயன் கருதாது பாராட்டுதல்

# பண்புடைய ஒரு நற்செயல்

பாராட்டுதல் என்பது ஒரு பண்பு; வளர்க்கப்பட வேண்டிய பண்பு.

மற்றவர்களின் நற்செயல்களை, திறமைகளை, சாதனைகளைப் பாராட்ட இலகுவில் மனம் வராது.

பாராட்டுவதிலான இந்தத் தயக்கம் கூச்சத்தினால் ஏற்படலாம்; சுயநலத்தால் ஏற்படலாம்; எரிச்சலால் ஏற்படலாம்.

பாராட்டாமல் விடுவதுஎன்பது கட்டாயமாகச் செய்ய வேண்டியசமூகப்பணி ஒன்றிலிருந்து தவறுவதாகும். இது சாதாரண குற்றம் மட்டும் அல்ல; பெரும் பாதகமாகக் கூட அமையலாம்.

பாராட்டுதல் வீட்டுக்கும் அவசியமானது, நாட்டுக்கும் அவசியமானது.

ஆனால் பொதுவாக எம்மவர் குறையைக் காணும் அளவிற்கு நிறையைக் காண்பதில்லை. வடையைக் காணாமல் அதன் துளையைமட்டும் காணும் மனப்பாங்குடன் எம்மில் பலர் இருக்கின்றார்கள்.

பாராட்டுதல் என்ற விஷயத்தில் நாம் மேலை நாட்டவர்களிடமிருந்து அதனைக் கற்றுக் கொள்ள வேண்டும்.

ஒரு குழந்தை சிறியதோர் நற்செயலைச் செய்தாலும் அவர்கள் 'அற்புதம்' என்று மனமார வாய் திறந்து பாராட்டுவார்கள்; அது போலவே அறிஞர்களின் சாதனைகளையும் அகமகிழ்ப் பாராட்டுவார்கள்.

நல்ல வீட்டமைப்பு, நல்ல சாப்பாடு ஆகியவற்றையும் அவர்கள் தயங்காமல், தாமதிக்காமல் பாராட்டி விடுவார்கள்.

நாங்கள் அப்படியா?

உதாரணத்துக்கு ஒன்றை மட்டும் பார்க்கலாம்.

இக் காலத்தில் எமது இளைஞர்களைப் பற்றி, மாணவர்களைப் பற்றி நாம் எத்தனை

**சமூகவியல்**

குறைகளைச் சொல்லி வருகின்றோம்.

'பாருங்கள்! அவங்கள் மூன்று பேர் சமாந்திரமாக றோட்டில் போகின்றார்கள். அறிவில்லை.'

'பாருங்கள் சைக்கிள் சீற்றில் இருந்து கொண்டே அதிபருடன் பேசுகின்றான். என்ன படிப்பு?''

'பாருங்கள் '[illegible]' [illegible] டால் 'ஓவர் டேக்' பண்ணுறான்'.

— இப்படி எத்தனையோ குறைகளைக் கூறுகின்றோம்

*இளைஞரின் நற்செயல்கள்*

ஆனால் எப்போதாவது மனம் திறந்து மனம் குளிர்ந்து



பாரதியார்

அவர்களுடைய நல்ல செயல்களைப் பாராட்டுகின்றோமா? இல்லையே.

இருட்டில் 'லைட்' இன்றி [illegible] வசதியாக தன்னுடைய லைற் [illegible] வேகத்தில் ஓடிச் செல்லும் இளைஞர்கள் இருக்கின்றார்களே!

இவர்களைப் பாராட்டி ஒரு வார்த்தைதானும் நாம் பேசுகின்றோமோ? எழுதுகின்றோமோ? இல்லை. ஏன் அப்படி?

யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் ஒருவர் அண்மையில் உரையாடல் ஒன்றில் கூறினார்.

'எமது பல்கலைக்கழக, பாடசாலை மாணவர்களில் 75சத வீதத்துக்கு அதிகமானோர் நல்ல பண்புகள் உடையவர்கள்; ஆசிரியர்களை மதிப்பவர்கள்'.

இங்கு பிரச்சினை என்னவெனில் இந்தப் பாராட்டு வெளியே கூறப்படுவதுண்டா? சம்பந்தப்பட்ட மாணவர்களின் காதுகளை எட்டுவதுண்டா?

*பாராட்டும் குடும்பங்களும்*

இது போலவே நாம் வீடுகளிலும் நடந்து கொள்கிறோம். கணவன் மனைவியைப் பாராட்டுவதில்லை; மனைவி கணவனை பாராட்டுவதில்லை; பெற்றோர் பிள்ளைகளைப் பாராட்டுவதில்லை; பிள்ளைகள் பெற்றோரைப் பாராட்டுவதில்லை.

மனதிற்குள் பாராட்டினாலும் அதை வெளியே யாரும் சொல்வதில்லை.

சமூக வாழ்வில் நாம் பாராட்டு விழாக்கள் பலவற்றை எடுக்கிறோம் உண்மை ஆனால் அவை பாராட்டா என்றால் சந்தேகமே.

*போலிப் பாராட்டு*

இங்கு பாராட்டு, பண்பு

## நாம் பாராட்டத் தவறியதால் நோபல் பரிசை இழந்த தமிழர்

என்ற நிலையிலிருந்து செயற்கையானதோர் கலையாக வளர்ந்துள்ளது. அவ்வளவு தான் பாராட்டு விழாக்களில் போலித் தன்மை மலிந்துள்ளது. சில வேளைகளில் இப் பாராட்டுவிழாக்கள் அவற்றை ஒழுங்கு செய்பவர்கள் தமக்குத் தாமே அல்லது தாம் 'தாஜா' செய்ய விரும்பியவர்களுக்கு விளம்பரம் செய்யும் விழாக்களாக அமைந்து விடுவதும் உண்டு. இவை பயன் கருதிச் செய்யப்படும் 'போலிப் பாராட்டுதல்கள் ஆகும்.

நாம் சுயமாக, விரைவாக பாராட்டுச் செய்ய முடியாமல் இருப்பதற்குப் பல காரணங்கள் உள்ளன. சுயமாகச் சிந்தித்தல், சுயமாக முடிவெடுத்தல் ஆகியன இல்லாத தன்மையும் இதற்கு ஒரு காரணமாகும்.

அந்நியரால் நீண்ட காலம் நாம் ஆளப்பட்டதும் எம்மத்தியில் இம் மனோ நிலையை ஏற்படுத்தியுள்ளது.

பாராட்டுவதற்குக் கூட நாம் மற்றவர்கள் கூறியதன்

**- பாரதிநேசன் -**

பின்னர் தானே அதைச்செய்கின்றோம்.

போப்பையர் கூறித்தானே திருவாசகத்தின் மகிமையை அறிந்தோம்.

அயல் நாட்டான் அதாவது மேலைநாட்டான் கூறிய பின் தானே நாமும் பாராட்டத் தொடங்குகிறோம்.

உள்ளூர்க்காரர் கூறுவதை நாம் சிந்தித்து, சீர் பார்த்து ஏற்றுக்கொண்டதுண்டா?

*நோபல் பரிசை இழந்த கதை*

பாராட்டும் பண்பும் எம்

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மானிப்பாய் பரிஷ் லயன்ஸ் கழகம்

தவிர்க்க முடியாத காரணத்தால் 28-11-93க்கு நடக்கவிருந்த சிட்டிழுப்பு மீண்டும் 14-01-94க்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதென்பதை மிகவும் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

தலைவர்.

(6821)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சிவசுப்பிரமணியம் தனலட்சுமி

காரைநகர், களபூமி, பாலாவோடையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், கனகராயன் குளத்தை வசிப்பிடமாகக் கொண்டவருமான திருமதி சிவசுப்பிரமணியம் தனலட்சுமி கனகராயன்குளத்தில் 25-11-93 அன்று காலமானார்.

இவர் கணபதிப்பிள்ளை சிவசுப்பிரமணியத்தின் அருமை மனைவியும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் தம்பு – பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற ஐயாத்துரை, காலஞ்சென்ற சரஸ்வதி, குமாரசாமி, பரமேஸ்வரி, கிருஷ்ணபிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை பாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகளும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் கனகராயன்குளத்தில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
செ. தருமராசா
(பேறாமகன்)

(28191)

## அருணாசலம் நடராசா (பாய்)

பொன்னாவளை, களபூமி, காரைநகரை பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்போது No: 1, விக்டோரியா வீதியில் வசித்தவருமாகிய அருணாசலம் நடராசா 26-11-93 இல் காலமானார்.

இவர் சிதம்பரத்தின் (பாக்கியம்) அன்புக் கணவரும், தவமணி, தனராசசிங்கம், லோகேஸ்வரி, சுந்தரராஜா, தவநாயகி ஆகியோரின் அன்புத் தந்தையாரும், மாணிக்கவாசகர், வசந்தகோகுலம், தியாகலிங்கம், வளர்மதி, தர்மலிங்கம் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 27-11-93 இல் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:
ந. தனராஜசிங்கம்
(மகன்)

No: 1, விக்டோரியா வீதி,
யாழ்ப்பாணம்.

(28197)

## சின்னையா தியாகராசா

கைதடி வடக்கை சேர்ந்த முன்னைநாள் ப. நோ. கூ. சங்க முகாமையாளர் சின்னையா தியாகராசா 27-11-93 இல் காலமானார்.

அன்னார் சரஸ்வதிதேவியின் அன்புக் கணவரும், தயாபரன் (பிரான்ஸ்), தயாளினி, சத்தியசீலன் தயாசக்தி, தயாமதி (பல்கலைக் கழக நுண்கலைப் பிரிவு யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சத்தியசீலன் (நீ. ப. நோ. கூ. சங்கம்) அவர்களின் அன்பு மாமனாரும் ஓய்வு பெற்ற பொலீஸ் உத்தியோகத்தர் சந்திரசேகரத்தின் தம்பியும், சுப்பையா இராமலிங்கம் (ஓய்வு பெற்ற நீதிமன்ற பதிவாளர்), நாகேந்திரன், (பெருந் தோட்ட கூட்டுத்தாபனம் கொழும்பு) திருமதி. பாக்கியம் நடராசா ஆகியோரின் மைத்துனரும், பிரசாத், நிவேதிக்கா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28-11-93) ஞாயிற்றுக்கிழமை பகல் 12.00 மணிக்கு கைதடி வடக்கில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் கைதடி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
த. சத்தியசீலன்
(மருமகன்)

கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

(28198)

## திருமதி சிரோன்மணி கந்தசாமி

அச்சுவேலியை பிறப்பிடமாகவும், ஆனைப்பந்தியடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிரோன்மணி கந்தசாமி காலமானார்.

அன்னார் காலம் சென்ற A. V. T. கந்தசாமி (Delmage Company) யின் அன்பு மனைவியும், காலம் சென்ற சிறீஸ்கந்தா, ரஞ்சன் (R.O.O.D தலைவர்) இன் அன்புத்தாயாரும், மல்லிகாவின் அன்பு மாமியாரும், கிருஷ்ணானந்தன், துர்க்கா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலம் சென்ற தருமசங்கரியின் ஒன்றுவிட்ட சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28-11-93) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல்மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
ரஞ்சன்
(மகன்)

79/2 பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தியடி.

(28199)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேசன் (பிறைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 28-11-1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

## இன்று

தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவைக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை பேரவை மண்டபத்தில் நடைபெறும். (க)

★ ★ ★

புலோலி சதாவதானி கதிரவேற்பிள்ளை சனசமூக நிலையத்தின் மாதாந்தப் பௌர்ணமிக்கலைவிழா நிலையமுன்றிலில் நிலையத் தலைவர் திரு. அ. துரைசிங்கம் தலைமையில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6-00 மணிக்கு நடைபெறும். (க-30)

★ ★ ★

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டம் சைவத்துறைப் பரிசளிப்பு விழா இன்று ஞாயிறு காலை 9 மணிக்கு மருதனார் மடத்தில் இயங்கும் யூனியன் கல்லூரியில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் த. துரைசிங்கம் தலைமையில் நடைபெறும். (த)

★ ★ ★

கந்தர்மடம் ஸ்ரீ சிவகுருநாத குருபீடம் வேதாந்த மட பரிபாலன சபையின் மாதாந்த சொற்பொழிவு இன்று பிற்பகல் 3-30 மணிக்கு வேதாந்த மடத்தில் நடைபெறும். யாழ். பல்கலைக்கழக தமிழ்த் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. சி. சிவலிங்கராசா சொற்பொழிவாற்றுவார். (த)

★ ★ ★

யாழ். திருமறைக்கலா மன்றத்தின் பிரதான வீதி கேட்போர் கூட்டத்தில் இன்று (ஞாயிறு) மாலை 5 மணிக்கு பண்பாட்டுக் கருத்தரங்கு நடைபெறும்.

அரங்கில் ''தமிழர் பண்பாடு'' என்னும் தொடரில் இரண்டாவது உரையை திரு. சி. நந்தகுமார் (தமிழ்மகன்) நிகழ்த்துவார். (த-51)

★ ★ ★

'துர்க்கா' இந்து கலை இலக்கிய மாத சஞ்சிகையின் வெளியீட்டு விழா இன்று ஞாயிறு பிற்பகல் 3 மணிக்கு சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய முன்றிலில் நடைபெறும். (த-28)

★ ★ ★

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையினரால் ஏற்பாடு செய்யப்பட்ட ஆறுமுகநாவலர் பேச்சுப் போட்டி இன்று ஞாயிறு காலை 8 30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் ஆரம்பமாகி நடைபெறும். (த)

★ ★ ★

தாயகம் சஞ்சிகையினர் நடத்தும் இலக்கியப் பயிலரங்கு-2 இன்று ஞாயிறு பிற்பகல் 3-30 மணிக்கு ஆரியகுளத்தடியிலுள்ள தமிழ் எழுத்தாளர் ஒன்றிய மண்டபத்தில் நடைபெறும்.

அரங்கில் ''தமிழ் இலக்கிய கொள்கையும் விமர்சனமும்'' என்ற பொருளில் பேராசிரியர் கா. சிவத்தம்பி கருத்துரை வழங்குவார். (த)

★ ★ ★

அகில இலங்கை சோதிடர் ஆய்வு மன்றத்தினருக்கான சந்திப்பு ஒன்று இன்று ஞாயிறு பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் ஆதீனத்தில் நடைபெறும். (த)

★ ★ ★

தற்போது பகுதிநேர ஆசிரியர்களாகக் கடமை புரியும் 45 வயதுக்குட்பட்டவர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று இன்று காலை 9 மணிக்கு யாழ் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில் நடைபெறும். (த)

★ ★ ★

நல்லூர் ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலய பௌர்ணமி தீப இசை அரங்கில் 3 ஆம் ஆண்டு நிறைவு விழா இன்று ஞாயிறு மாலை 6 மணிக்கு நல்லை ஆதீனத்தில் நடைபெறும். (த)

### பயன் கருத து...

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மிடம் இல்லாததால் ஒரு நோபல் பரிசைத் தமிழர் இழந்துள்ளனர் என்று இப்பொழுது எண்ணுவதற்கு இடமிருக்கிறது.

பாரதியார் உலக மகாகவி; அவருக்குக் கட்டாயம் நோபல் பரிசு கிடைத்திருக்க வேண்டும்.

கிடைக்காததற்கு இரண்டு காரணங்கள் கூறப்படுகின்றன; ஒன்று, அவருடைய படைப்புகள் ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்யப்படாதிருந்தது. இரண்டு, அவரைத் தமிழர் அறிஞர் உலகம் தக்க அளவு பாராட்டாமல் இருந்தது. அவர் காலத்தில் அவரின் திறமை உலகளாவ எட்டவில்லை.

பாராட்டத் தெரியாதது நமக்கு நாமே இழைத்த பயங்கரப் பாதகம் இதுவல்லவா?

# இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண சர்வதேசரீதியில் அரசுக்கு அழுத்தம்

## சம்மேளனம் அமைப்பது குறித்து குமார் ரூபசிங்க

லண்டன், நவ. 28

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண ஏற்ற சூழ்நிலையை தோற்றுவிக்குமாறு கோரி இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் சர்வதேச ரீதியாக பிரசாரம் செய்ய சம்மேளனம் ஒன்றை உருவாக்க ஆலோசிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச விழிப்பு இயக்கத்தின் செயலாளர் கலாநிதி குமார்ரூபசிங்கா இத்தகவலை தெரிவித்துள்ளார்.

நாட்டில் இனப்பிரச்சினை இல்லை என ஜனாதிபதி விஜேதுங்கா அடிக்கடி கூறி வருகிறார். இத்தகைய கருத்துக்கள் நிலைமையை மேலும் மோசமடையச் செய்கின்றன.

ஆளும் கட்சியாலும், எதிர்க் கட்சிகளாலும் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகான இயலாது போய் விட்டது. எனவே சிங்கள - தமிழ் பிரஜைகள் பாரிய சமாதான இயக்கம் ஒன்றை உருவாக்க வேண்டும்.

சிங்கள, தமிழ்மக்களிடையே இன்று சமாதான தாகம் அதிகம் உண்டு என நான் நம்புகிறேன். சமாதானம் உருவாக வேண்டுமானால் அதற்கான நடவடிக்கையை அரசியல்வாதிகளிடமிருந்து பிரஜைகள் அமைப்பு பறித்தெடுக்க வேண்டும். அடுத்து சர்வதேச ரீதியில் அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

இவ்வாறு கலாநிதி குமார் ரூபசிங்கா மேலும் தெரிவித்தார். (இ-5-6)

### சில வந்துறை ..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளுக்கு முன்னர் மன்னார் மாவட்டத்தில் பரப்புக்கடந்தான், நானாட்டான், ஆட்காட்டிவெளி, அடம்பன் ஆகிய இடங்கள் உட்பட சுமார் 20 மைல் பிரதேசத்தில் இருந்து படையினர் வெளியேறி இருந்தனர்,

மணலாறு மண்கிண்டிமலையில் விடுதலைப் புலிகள் நடத்திய பெரும் தாக்குதலை அடுத்தே படையினர் அப்போது வெளியேறி இருந்தனர்.

இப்போது, பூநகரிப் பெரும் தாக்குதலைத் தொடர்ந்து கேந்திர இராணுவ முகாம்களான சிலாவத்துறை கொண்டைச்சியிலிருந்து படையினர் வெளியேறியுள்ளனர்.

கொண்டைச்சி இராணுவ முகாமை விடுதலைப் புலிகள் 1990 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 21 ஆம் திகதி தகர்த்தனர்.

சிலாவத்துறை இராணுவ முகாமை, விடுதலைப் புலிகள் 1991 ஆம் ஆண்டில் தாக்கி அழித்தனர். அப்போது நடந்த நான்கு நாள் சமரில் பெரும் எண்ணிக்கையான சிப்பாய்கள் மாண்டனர்.

இந்த இரண்டு முகாம்களும் முக்கியம் எனக் கருதி மீண்டும் அவற்றை இராணுவத்தினர் அமைத்திருந்தனர். (அ-3)

### ஐ. தே. க...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

திஸநாயக்காவுக்கு உண்டு என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

இதேவேளை —

காமினி திஸநாயக்காவுடனும், அவர் மூலமாக எதிர்க் கட்சித் தலைவர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவுடனும் அமைச்சர் தொண்டமான் பேச்சு நடத்தி வருகிறார் எனவும் அதை அறிந்து ஐ. தே. க. தலைவர்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர் என்றும் 'ராவய' ஆசிரியர் திரு. விக்ரர் ஐவன் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் தொண்டமானைத் திருப்திப் படுத்தும் நோக்கில் ஐ. தே. க. பிரமுகர்கள் அவருடன் பல சுற்றுப் பேச்சுக்களை நடத்தியுள்ள நிலையிலும் — அமைச்சர் தொண்டமான் எதிரணியினருடன் இணைவாரா அல்லது அரசுக்குள் தமது செல்வாக்கைப் பலப்படுத்த இந் நிலையை வாய்ப்பாகப் பயன்படுத்துவரா என்பது தெளிவாகவில்லை என்றும் திரு. விக்டர் ஐவன் பி. பி. ஸிக்குத் தெரிவித்தார். (இ-6-5)

### மாவீரர் நாள்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

எழுச்சியுடன் நடைபெற்றன.

தென் தமிழீழத்திலும் பல இடங்களில் மாவீரர் தினம் எழுச்சியுடன் கொண்டாடப்பட்டது.

மாவீரர் வார ஆரம்ப நாளான 21ஆம் திகதி காலை 9 மணிக்கு ஏற்றப்பட்ட தமிழீழ தேசியக் கொடி நேற்று மாலை 5 மணிக்கு அநேகமான இடங்களின் உரிய மரியாதையுடன் இறக்கப்பட்டது.

மாலை 5 மணிக்குப் பின்னரும் நிகழ்ச்சிகள் நடைபெற்ற இடங்களில் நிகழ்ச்சிகள் முடிவடைந்த பின்னர் தேசியக் கொடி அமைதியாக இறக்கப்பட்டது. (அ-3-15-17-30)

## ஆலயங்களில்

கொழும்புத்துறை மணவியம்பதி அருள் மிகு ஸ்ரீ அம்மன் -ஐயனார் ஆலயத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை மாதாந்த திருவிளக்குப் பூசையும் சுமங்கலி பூசையும் நடைபெறும். (க)

★ ★ ★

மல்லாகம் பழம்பதி கோவிலில் இன்று ஞாயிறு மாலை 3.30 மணிக்கு ''ஸ்வர்ண கௌரிதீபஜோதி பூசை'' நடைபெறும். (க-45)

## விளக்கீடு

யாழ்ப்பாணம், நவ. 28

யாழ். குடாநாட்டில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை கார்த்திகைதீப விளக்கீடு இந்துக்கள் இல்லங்களிலும், முருகன் ஆலயங்களிலும் நடைபெறும்.

சுவாமி வீதி வலம் வந்து சொக்கப்பனை எரித்தலும் இடம்பெறும்.

இன்று பூரணை தினமாகையால் பெரும்பாலான அம்மன் கோவில்களில் மாதாந்த திருவிளக்குப் பூசையும், சுமங்கலி பூசையும், அம்பாள் வீதிவலம் வருதல் நிகழ்வுகளும் நடைபெறும்.

நாளை திங்கட்கிழமை மாலை விஷ்ணுவாலய தீபம் இடம்பெறும். (க-30-100-111)

### கடல்வழி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வாதப் பிரச்சினை எனக் கூறிக் கொண்டு, சிங்கள அரசு மக்களை அழிக்கவும் இராணுவ ரீதியில் எமது மண்ணை கபளீகரம் செய்யவும் கங்கணம் கட்டி நிற்கின்றது.

தலைவர் பிரபாகரன் காலத்துக்கு காலம் கொடுக்கும் அடி சிங்கள அரசின் திட்டங்களை தவிடு பொடியாக்கி வருகிறது. படையினரை நிலை குலைய வைத்துள்ளது.

மாவீரர் வாரத்தில் விடுதலைப் புலிகள் பாரிய தாக்குதலை நடத்தலாம் என்றும் முகாம்களை தகர்க்கலாம் என்றும் ஊகிக்கப்பட்டு கொழும்பும், படையினர் முகாமும் உஷார் நிலையில் வைக்கப்பட்டிருந்தன. எதிரிக்கு அச்சுறுத்தலாக அமைந்த இந்த மாவீரர் வாரத்தில் பூநகரி முகாமை நாம் தகர்த்தோம்.

இராணுவ ரீதியில் எமது மக்களை அழிக்க முடியாது என்பதை, பூநகரி முகாம் தகர்ப்பு மூலம் எதிரிக்கு பாடம் புகட்டியுள்ளோம்.

எதிரிக்கு — அச்சுறுத்தலாக உள்ளதும். உலக நாடுகளால் உன்னிப்பாக அவதானிக்கப்பட்டதுமான இந்த மாவீரர் வாரத்தில், தமிழீழ தமிழருக்கான அடித்தளமாக எமது படைத்தளத்தை பலப்படுத்த சகல மக்களும் இணைந்து செயல்படுவோம் என்று உறுதிமொழி எடுப்போம்.

எம்மிடம் நவீன ஆயுதங்கள் ஏராளமாக உள்ளன. இதைக் கொண்டு எமது படைத் தளத்தை பலப்படுத்த வேண்டும். இல்லையேல் அழிவையே சந்திக்க நேரிடும்.

இப்படி அவர் கூறினார்.

மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன். தியாகம், யாழ். மாவட்ட அரசியல் துணைப் பொறுப்பாளர் இளையவன், மகளிர் அமைப்பு பொறுப்பாளர் தமிழவள் ஆகியோரும் உரையாற்றினர். (இ-3)

### இரு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ராஜஸ்தானில் 31 தொகுதிகளில் இந்திரா காங்கிரஸும் 37தொகுதிகளில் பாரதிய ஜனதாக் கட்சியும் முன்னணியில் இருக்கின்றன. (க)

தாய்மண் மீட்க உறுதி எடு
தமிழீழமெங்கும் மரங்கள் நடு

## மாவீரர் கூட்டங்களில் அணிவகுப்பு மரியாதை

யாழ்ப்பாணம், நவ. 28

மாவீரர் நாள் பொதுக் கூட்டங்கள் நேற்று மூன்று இடங்களில் சிறப்பாக நடைபெற்றன. அங்கு அணி வகுப்பு மரியாதைகளும் இடம்பெற்றன. இக்கூட்டங்களுக்குப் பெரும் எண்ணிக்கையான மக்கள் திரண்டிருந்தனர்.

யாழ். மாவட்டத்தில் வலிகாமக் கோட்டத்தில் அரியாலை காசிப்பிள்ளை அரங்கிலும் —

வடமராட்சிக் கோட்டத்தில் வதிரி உல்லியன் எல்லையம்மன் கோவிலடியிலும் —

தென்மராட்சிக் கோட்டத்தில் மட்டுவில் மகா வித்தியாலயத்திலும் — பொதுக்கூட்டங்கள் நடைபெற்றன.

வலிகாமக் கோட்டத்தில்—

யாழ். அரச செயலகம் பகுதியில் இருந்து புறப்பட்ட தமிழீழ காவல்துறையினரினதும், விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பினதும் பாண்ட் வாத்திய அணிவகுப்பு அரியாலை காசிப்பிள்ளை அரங்கையும் —

தென்மராட்சிக் கோட்டத்தில் —

ஏரக்கேணி கந்தசாமி கோவிலடியில் இருந்து ஆரம்பமான மகளிர் படையணியினதும், விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பினதும் பாண்ட் வாத்திய அணிவகுப்பு மட்டுவில் மகா வித்தியாலய அரங்கினையும் —

வடமராட்சிக் கோட்டத்தில் —

நெல்லியடிச் சந்தியில் இருந்து வடமராட்சி மகளிர் மாணவர் அமைபினதும், கடற்புலிகளின் படைத்துறைப் பள்ளியினதும் அணிவகுப்பு வதிரி உல்லியன் எல்லைபம்மன் கோவிலையும் — சென்றடைந்தவுடன் கூட்டங்கள் ஆரம்பமாகின.

விடுதலைப் புலிகளின் பிரமுகர்கள் பலரும் கூட்டங்களில் உரையாற்றினர். கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ். கல்வித் திணைக்களம் யாழ். மாவட்ட பாடசாலை அணிகளுக்கிடையில் நடத்தி வரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் — 19 வயதுப் பிரிவில் - இன்று பிற்பகல் 2.30 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் சென். சாள்ஸ் ம. வி. அணியை எதிர்த்து ஹாட்லிக் கல்லூரி அணி மோதும்.

★ ★ ★

யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் யாழ். மாவட்டத்தில் உள்ள ப. நோ. கூ. ச. அணிகளுக்கிடையில் மாவீரர் வெற்றிக்கிண்ணத்துக்காக நடத்திவரும் கரப்பந்தாட்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

கரப்பந்தாட்டம்

★ காலை 8.30 மணி:- உடுப்பிட்டி ப. நோ. கூ. ச. எதிர் மானிப்பாய் ப. நோ. கூ. ச.

உதைபந்தாட்டம்

★ பி. ப. 2 மணி:- நெல்லியடி ப. நோ. கூ. ச. எதிர் புங்குடுதீவு ப. நோ. கூ. ச.

★ பி. ப. 3 00 மணி:- யாழ். ப. நோ. கூ. ச. எதிர் தெல்லிப்பளை ப. நோ. கூ. ச.

★ மாலை 4.00 மணி:- சங்கானை ப. நோ. கூ. ச. எதிர் உடுப்பிட்டி ப. நோ. கூ. ச.

## ஓராண்டு நினைவலைகள்

மலர்வு
12-08-1923

உதிர்வு:
09-12-1992



### அமரர் சின்னையா இராசையா

(ஓய்வு பெற்ற பிரதிப் பிரதேச முகாமையாளர் அரச மரக் கூட்டுத்தாபனம்)

திதி: 28 - 11 - 1993

குடும்பமெனும் கோவிலிலே தெய்வமாய் குடியிருந்தீர்!
தெய்வம் விடை பெற்றால் கோவிலின் நிலைஎன்ன?
அன்றிலை இழந்த பேடுபோல் ஒளி இழந்த-
கண்களைப்போல்
உமை பிரிந்து யாம் வாடுவதை யார் அறிவார்?
விண்ணிலே விடிவெள்ளியாய் இருக்கும்-
உம்மை அன்றி......

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மனைவி, மைத்துனர்மார்,
மைத்துனிமார், உற்றார், உறவினர்.

'ராணி கொட்'
7ஆம் கட்டை,
சங்கானை.

(6820)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org